# சைவநீதி

# SAIVANEETHI

JAN - FEB 2001
விக்கிரம தை



உ
சிவமயம்

# சைவநீதி

## உள்ளே...

1. முயல் விட்டுக் காக்கை பின் போனவாறே ........ 1
2. சிவத்தமிழ்ச் செல்வியை வாழ்த்துகிறோம் ........ 2
3. மணிவிழாக் கண்ட இராமஸ்வாமி ........ 3
4. நடராச சருக்கம் ........ 4
- ஆறுமுகநாவலர்
5. பலியினால் வரும் பாவம் ........ 5
- திருமுருக கிருபானந்தவாரியார்
6. பாணலிங்கத்தின் உற்பத்தி ........ 10
7. இன்பம் எங்கே ? ........ 11
8. பஞ்சோபசாரங்கள் ........ 12
9. சைவ வினாவிடை
நித்தியகருமவியல் ........ 13
- ஆறுமுகநாவலர்
10. திருவங்கமாலை ........ 15
- திருநாவுக்கரசுசுவாமிகள்
11. சைவ சித்தாந்த சாத்திரக் கட்டுரைத் தொடர்
உண்மை விளக்கம் ........ 16
- மெய்கண்டார் அடியவன்
12. நினைவிற் கொள்வதற்கு ........ 18
13. திருத் தசாங்கம் ........ 19
- மட்டுவில் ஆ.நடராசா
14. ஆற்றல் மிக்க அன்பு ........ 23
- முருகவே பரமநாதன்
15. சைவநெறிப் பாடமும் பயிற்சியும் ........ 26
- சாந்தையூரான்
16. பல்வகைக் கூற்றங்கள் ........ 28

சைவநீதி இதழில் வெளிவரும் கட்டுரைகளிலுள்ள கருத்துக்களுக்குக் கட்டுரை ஆசிரியர்களே பொறுப்பாளிகளாவர். - இதழ் நிர்வாகிகள்.

உ

சிவமயம்

" மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம் "

# சைவநீதி

மலர் 4 விக்கிரம தை சைவசமய வளர்ச்சி கருதி வெளிவரும் மாதஇதழ் - 10

## முயல்விட்டுக் காக்கைப் பின் போனவாறே !

தக்கதொன்றைச் செய்யாது கைவிட்டுத் தகாததொன்றைச் செய்து பயனற்று இருக்கும் தன்மையைத் தான் "முயல்விட்டுக் காக்கைபின் போனவாறே என்ற பழமொழி விளக்குகின்றது.

வாழ்க்கையிலே தவறான வழியிற் சென்ற ஒருவன், தான் வாழ்ந்த வாழ்வு தவறானதெனத் தெரிந்து நல்லவனாகி நன்னெறியில் ஒழுகும் நாளில் பழைய நிலை பற்றி நினைவு வருகின்ற போது பயனற்ற வாழ்வு வாழ்ந்தேனே என்று எண்ணத் தோன்றும்.

திருநாவுக்கரசு சுவாமிகள் சைவநெறியை விட்டு விலகிக் கொல்லாமை மறைந்துறையும் அமண் சமயத்துள் அமிழ்ந்திருந்தார். இறைவன் சூலை நோய் கொடுத்து அவரை ஆட்கொண்டான். நாவரசர் சிவநெறியினை எய்திப் பேரருள் பெற்று இடர் நீங்கி இன்பம் பெற்றார். தன் பழைய நிலையை நினைத்த சுவாமிகள் "சமணத்திற் சென்று என்ன இன்பம் கண்டேன்" என நொந்த போது முயல்விட்டுக் காக்கை பின் போனவாறே என்ற முது மொழி அவர் நினைவில் வந்தது.

வினையை அனுபவிப்பதற்கு இறைவனால் கொடுக்கப்பட்டது இந்த உடம்பு. எமக்கு வருகின்ற இன்ப துன்பங்களெல்லாம் எம் வினைப்பயன். இதை நாமே அனுபவித்துத் தீர்க்க வேண்டும். துன்பமில்லா வாழ்வுக்கு வழிகாட்டுவோம் என்று கூறி மத மாற்றம் நடைபெறும் இன்றைய நிலையிற் சிந்திக்க வேண்டிய முதுமொழிதான் மேற்கூறியது. அங்கு அறிந்து அத்துயரை நீக்கவல்ல பெருமானை வணங்கி அவன் திருவருளால் வினைதீர்த்து அவனை உள்ளமாகிய கோயிலிலே இருத்தி அவனுக்கு அன்பு செய்தலே நல்நெறியாகும்.

என்பிருத்தி நரம்புதோல் புகப்பெய்திட் டென்னையோர் உருவமாக்கி
இன்பிருத்தி முன்பிருந்த வினைதீர்த்திட் டென்னுள்ளங் கோயிலாக்கி
அன்பிருத்தி அடியேனைக் கூழாட்கொண் டருள் செய்த ஆரூரர் தம்
முன்பிருக்கும் விதியின்றி முயல்விட்டுக் காக்கைப்பின் போனவாறே.

*அப்பரடிகள்*

# சிவத்தமிழ்ச் செல்வியை வாழ்த்துகின்றோம்



சங்க காலத்திலிருந்து இன்று வரை சைவத்திற்கும் தமிழுக்கும் சேவை செய்த, சேவை செய்கின்ற பெண மணிகளின் பட்டியல் மிக நீளமானது. அந்த வரிசையில் கலாநிதி – சிவத் தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் பெயரும் பொன் எழுத்துக் களால் பொறிக்கப்படும்.

ஔவை என்றொரு புலவர் சங்ககாலத்தில் தமிழ் வளர்த்தார். ஔவை பாடிய விநாயகர் அகவல் அவர் யோக நெறியில் நின்று பரம்பொருளைப் பக்தி செய்தார் என்பதைச் சுட்டுகின்றது."அறஞ் செய்ய விரும்பு" என்பது போன்ற அரிய பல அறக் கருத்துக்களைத் தமிழுலகத்துக்குத் தந்தவர் ஔவையார்.


காரைக்காலம்மையார் பக்தி நெறியில் நின்று, பக்தி இலக்கியத்துக்குப் பங்களிப்புச் செய்தார். மங்கையர்க்கரசியார், சமண சமய ஆதிக்கத்திலிருந்து பாண்டி நாட்டை மீட்டெடுத்தார்.

அந்நியர் ஆட்சிக் காலத்தில் சைவசமயத்தை அழிந்துபோகாமல் காப்பாற்றுவதற்குக் கந்தபுராணத்தில் ஊறித்திளைத்த யாழ்ப்பாணத் தமிழ்ப் பெண்கள் பலர் மறைமுகமாக அளப்பரிய பணிபுரிந்தனர்.

மங்கையராலுஞ் சிறப்பாகஆலயங்களை நிருவகிக்கமுடியும், அன்னையராலும் ஆதுலர் சாலைகளை அமைத்துச் சைவத் தமிழ்ப் பெண்களைப் பாதுகாக்க முடியும், சமூகப் பணியில் ஈடுபட முடியும் என்பவற்றை யெல்லாம் நிரூபித்துக் காட்டியவர் துர்க்கா துரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டி.

அகவை எழுபத்தாறு கண்ட அவரது பணியைச் சைவத் தமிழுலகம் மேலும் மேலும் வேண்டி நிற்கின்றது. அவர் பல்லாண்டு காலம் நலமாக வாழ்ந்து பணிபுரிய வேண்டுமென அவரின் இஷ்ட தெய்வமாகிய துர்க்கா தேவியை வேண்டி அவருக்கு இதயபூர்வமான நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் சைவ நீதி நிறுவனம் பெருமகிழ்வடைகின்றது.

# மணிவிழாக் கண்ட இராமஸ்வாமி அவர்களைச் சிவப் பணிபுரிந்து வாழ்க என வாழ்த்துகிறோம்



வன்னிவள நாட்டின் எல்லையில் வளர்ந்து வரும் நகரம் வவுனியா. இந்நகரைச் சீருடனுஞ் சிறப்புடனும் வளர்த்தெடுப்பதற்கு அல்லும் பகலும் அயராதுழைப்பவர்களில் ஒருவர் உயர்திரு அழகர் சுவாமி இராமஸ்வாமி.

உட்சுவர் தீற்றாது புறச்சுவர் தீற்றுவோர் வரிசையைச் சேராதவர் திரு.இராமஸ்வாமி

இவர் பட்டினப் பாலையில் பாடப்பட்ட

கொள்வதும் மிகை கொளாது
கொடுப்பதும் குறை கொடாது

பலபண்டம் பகர்ந்து வீசும் வர்த்தகர் வரிசையைச் சேர்ந்தவர். அதனால் இவர் திருமகளின் அருள் நோக்குக்குப் பாத்திர மாயிருக்கிறார்.

வவுனியாவில் இந்துமாமன்றம் அமைத்து, அந்த மன்றத்தின் தலைவராயிருந்து சமய நிகழ்ச்சிகளைச் சிறப்புற நடத்தியும் பூரணை விழாவெடுத்தும் திருமுறை முற்றோதல் நிகழ்த்தித் திருமுறை விழாவெடுத்தும் சைவாலயங்களுக்கு வாரிவழங்கியும் சமயப் பணி புரியவர் திரு. இராமஸ்வாமி.

ஆண்டு தோறும் அறநூல்களை வெளி யிட்டுச் சமய நூல்களையும் தமிழ் நூல் களையும் வெளியிடுவோருக்கு நிதியுதவி அன்னை தமிழை வளர்ப்பதற்கு அரும் பாடுபடுபவர் திரு. இராமஸ்வாமி. வவுனியாவில் இவர் பங்கு பற்றாத பொதுப் பணி இல்லை யென்றால் அது மிகையாகாது.

அற்றார் அழிபசி தீர்த்து, விருந்தோம்பி, இல்லறத்தின் பண்பும் பயனுமறிந்து வாழ்ந்து மணி விழாக்காண்கின்ற இராமஸ்வாமி அவர்கள், தன் வாழ்வில் இன்னும் பல விழாக் களைக் காண்பாராக. அவரும் அவருக்கு அறப்பணிபுரிய அனுசரணை யாயிருக்கும் அவருடைய குடும்பமும் நீடு வாழ்க.

# நடராஜ சருக்கம்

- ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

தைப்பூசம் வியாழக்கிழமையோடு கூடும் சித்தயோக தினம் வர, அன்று மத்தியானத்திலே, ஆயிர முகத்தையுடைய பானுகம்பர் ஆயிரஞ் சங்கூத, ஆயிரந் தோளையுடைய வாணாசுரன் குடமுழா ஒலிப்பிக்க, பஞ்சதுந்துபியொலியும் வேதவொலியும் கந்தருவருடைய கீதவொலியும் மிக்கெழ, ஞானசபையிலே சிவபெருமான் உமாதேவியாரோடு நின்று, ஆனந்த நிருத்தஞ் செய்தருளினார். வியாக்கிரபாத முனிவர் பதஞ்சலிமுனிவர் என்னும் இருவரும், பிரமா விட்டுணு முதலிய தேவர்களும், திருவுடையந்தணர் மூவாயிரரும், பிறரும், சிவ பெருமானுடைய திருவருளினாலே, ஞானக் கண்ணைப் பெற்று, அவருடைய ஆனந்த தாண்டவத்தைத் தரிசித்து, உரோமஞ் சிலிர்ப்ப, நெஞ்ச நெக்குருகக், கண்ணீர் பொழியச், சிவானந்த மாக்கடலின் மூழ்கினார்கள். பதஞ்சலிமுனிவர்: " எம்பெருமானே! இந்த ஞான சபையிலே உமாதேவியாரோடு இன்று முதல் எக்காலமும் ஆன்மாக்களுக்கு ஆனந்த நிருத்தத்தைப் புலப்படுத்தி யருளும்" என்று வேண்டிக் கொண்டார். அதற்குச் சிவபெருமான் உடன்பட்டருளினார்.

சிவபெருமான் பணித்தருளியபடியே, தேவர்கள் அந்த நிருத்த ஸ்தானத்தை வளைத்து, உயர்ந்த பொன்னினாலே ஒரு மகாசபை செய்தார்கள். சிவபெருமான், அன்று தொடங்கித் தேவர்களும் வியாக் கிரபாதமுனிவர் பதஞ்சலிமுனிவர் முதலாயினோரும் வணங்கச், சிவகாமியம்மையாரோடும் கனகசபையிலே எக்காலமுந் திரு நிருத்தத்தைத் தரிசிப்பித் தருள் வராயினர்.

இங்கே எல்லோரும் நிருத்த தரிசனஞ் செய்துகொண்டிருக்கு நாளிலே, பிரமதேவர், கங்கைக் கரையிலுள்ள அந்தர் வேதியிலே ஒரு யாகஞ் செய்யத் தொடங்கிக் கொண்டு தில்லைவாழந்தணர்களையுந் தேவர்களையும் அழைத்துக் கொண்டு வரும் பொருட்டு, நாரத முனிவரைத் தில்லைவனத்துக்கு அனுப்பினர். அந்நாரத முனிவருடைய சொல்லைக் கேட்ட தேவர்களும் அந்தணர்களும்: “இங்கே ஆனந்த நிருத் தமாகிய அமிர்தத்தை உண்ணும் நாங்கள் இனி உங்கள் அவியை உண்ணோம்” என்றார்கள். அதனை, நாரதமுனிவர் சென்று, பிரமதேவருக்கு விண்ணப்பஞ் செய்ய, அப் பிரமதேவர் தாமே சென்று, தில்லைவனத்தை அடைந்து, சிவகங்கையிலே ஸ்நானஞ் செய்து, திரு நிருத்தத்தைத் தரிசித்துச், சிவலிங்கத்தை வணங்கி, வியாக் கிரபாத முனிவரிடத்தே போய், அவர் வாயிலாகத் தில்லைவாழந்தணர்களையுந் தேவர்களையும் உடன் படுத்தி அந்தர் வேதிக்கு அழைத்துக் கொண்டு போய்த், தமதியாகத்தை முற்று வித்தார். வியாக் கிரபாதமுனிவரும் பதஞ்சலி முனிவரும், நிருத்த தரிசனஞ் செய்து கொண்டு, தில்லைவனத்தில் இருந்தார்கள்.

செய்யாமற் செய்த வுதவிக்கு வையகமும்
வானகமு மாற்ற லரிது.

தான் ஓர் உதவியும் செய்யாத நிலையில், ஒருவன் தனக்குச் செய்த உதவிக்கு மண்ணுலகத்தையும் விண்ணு லகத்தையும் கைம்மாறாகக் கொடுத்தாலும் ஈடாகாது. 101

# பலியினால் வரும் பாவம்

- திருமுருக. கிருபானந்தவாரியார்.

எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணி இரங்கவுநின்
தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே!

கோழிகள் கூவின, கூவின பூங்குயில், புள்ளினங்கள் வானத்தில் இனிமையாக ஒலி செய்து கொண்டு இரை தேடுவதற்குச் செல்லத் தொடங்கின. சிவபெருமானைப் பணிய வந்த தேவர்களது மணிமுடிகள் ஒளி மழுங்கின போல் நட்சத்திரங்கள் ஒளிமழுங்கின. கதிரவனுடைய உதயத்தின அறிகுறியான நிமித்தங்கள் பல காணப்பட்டன. ஆலயந் தோறும் கண்டா மணிகள் கடலொலி போல் முழங்கின. ஆலயங்களில் விடியற்காலத்திலேயே சகலவித மேளதாளங்களுடனும் பூசை நடந்து கொண்டிருந்தது. வீதிகள் தோறும் தேவார திருப்புகழ் திருவருட்பாப் பாராயணங்கள் நடந்து கொண்டிருந்தன. திருவெம்பாவை படித்துக் கொண்டு பல அன்பர்கள் வழிபாடு செய்து கொண்டிருந்தார்கள். இன்னும் பொங்கல் பண்டிகை 30 நாட்கள்தான் இருக்கின்றன என்று சிலர் பேசிக் கொண்டிருந்தார்கள். அந்த ஊரில் ஒவ்வொரு வீட்டிற்கு முன்னும் பூப் பிள்ளையார் வைத்திருந்தது. அதிகாலையானபடியால் எதிரில் வரும் ஆட்கள் நன்றாகத் தெரியாமலிருந்தது. பெண்மக்கள் நதியில் நீராடி நீராடி நீர்க் குடங்களை எடுத்துக் கொண்டு, வந்து கொண்டிருந்தார்கள். அந்தவூர் நேபாளத்தைச் சார்ந்திருந்ததனால் குளிர் மிகுதியாகவேயிருந்தது. சனங்கள் குளிரைப் பொருட் படுத்தாமல், மார்கழி மாதமாதலால் வைகறை யிலேயே எல்லோரும் குளித்துவிட்டுத் திரு நீறணிந்து காண்பதற்கு இனியராக இருந்தார்கள்.

அந்த ஊர்க் கோடியிலுள்ள காளிகோயில் பூசாரி காளிமுத்து என்பவன், தனக்கு வருவாய் வரும் அந்தக்காலத்தில் மிகுந்த மகிழ்ச்சியுடன் காளி கோயிலில் பூசை செய்து கொண்டிருந்தான். பலர் வந்து அவனையே காளிதேவியென்று, அவனிடம் தங்கள் குறைகளைச சொல்லிக் கொண்டு நின்றார்கள். அவன் சிறிது நேரம் சும்மா இருந்து ஸ் .. ஸ்ஸ் என்று சிறிது கண் திறந்து, காளியம்மை தன்மேல் ஆவேசித்ததாக பாவனை செய்து, பையத் தலையை அவிழ்த்துக் கொண்டு ஆடி, காளியம்மை பேசுவது போல் வாய்க்கு வந்ததெல்லாம் பிதற்றிக் காணிக்கைகளைப் பறித்துக் கொண்டிருந்தான். மார்கழி மாத மாதலால் விடியற்காலை எழுந்து தண்ணீரில் முழுகி, காளியைப் பூசித்துத் தயிரன்னம் நிவேதித்து, அந்தப் பிரசாதத்தை நாள்தோறும் உண்டு வந்தான். பனியின் வேகத்தாலும், வழக்கந் தவறி விடியற்காலை குளிர்ந்த தண்ணீரில் முழுகியதாலும், தயிரன்னம் உண்டதனாலும் காளிமுத்துப் பூசாரியைச் சுர நோய் பற்றிக் கொண்டது. வருவாயை உத்தேசித்துச் சுரத்தைப் பொருட்படுத்தாமலே வழக்கப்படி அதிகாலையில் முழுகி, தெய்வமாடி வந்தனன். அதனால் சுரம் கடுமையாக முதிர்ந்து விட்டது. எத்தனை போர்வைகளைப் போர்த்தியும் குளிர் அடங்கவில்லை. உணவின் கெடுதியால் உண்டான கேடு என்று அவனுடைய அறிவில் தோன்றவில்லை. தெய்வ குற்றம் என்று நினைத்தான். அவனைச் சூழ்ந்துள்ளவர்களும் "அப்பா! காளிமுத்து! ஏதோ காளி பூசையில் குற்றம் செய்து விட்டாய்". அதனால் அம்மன்

**The gift of heaven and earth is not an equivalent for a benefit which is conferred where none had been received**

சீறி விட்டாள். அம்மனை வேண்டிக்கொண்டு பூசை போடவேண்டும்" என்று சொன்னார்கள்.

காளிமுத்து காளிதேவிக்கு அபிஷேகம் செய்து பொங்கலிட்டு, உடுக்கடித்து, ஆடிப்பாட வைத்து, இரண்டு ஆட்டுக்குட்டிகளைப் பலியிட்டான். சில நாளில் காளிமுத்து நோய் நீங்கிப் பூரண சுகமுற்றான். பழையபடி காளிக்குப் பூசை செய்து, சுவாமி சேவிக்க வருகின்றவர்களை ஏமாற்றிப் பொருள் பறித்து, மாலை நேரத்தின் ஆவேச நீரையும் குடித்து காலங் கழித்து வந்தான்.

அந்த நேபாள தேசத்தை அரசாளுகின்ற மன்னன் மகவின்றித் தானதருமங்களைச் செய்து தவம் பல செய்து வந்தான். அப்படியே மந்திரியும் மக்கட் பேறு இன்றி வருந்தினான். சில நாட்களுக்குப்பின் அரசன் மனைவியும் மந்திரி மனைவியும் கருவுற்றார்கள். அரசனும் அமைச்சனும் ஆனந்த வாரிதியில் மூழ்கினார்கள். உரிய காலத்தில் பூ முடித்தல், சீமந்தம், பும்சவனம் முதலிய வைதிகச் சடங்குகள் நடந்தன. நல்ல நாளில் அரசன் மனைவி ஓர் ஆண் மகவைப் பெற்றெடுத்தாள். எல்லா இலக்கணங்களும் பொருந்தியிருந்த அம்மைந்தனை மன்னன் கண்டு பெருமகிழ்ச்சியுற்றான். அப்படியே மந்திரிக்கும் ஆண் மகவு தோன்றியது. புத்திரோத்சவங் கொண்டாடினார்கள். அந்தணர்கட்கும் ஆதுலர்கட்கும் தானங்கள் வழங்கினார்கள். அந்தத் தேசத்திலுள்ள எல்லாக் கோவில்களிலும் அபிஷேக ஆராதனைகளைச் செய்வித்தார்கள்.

குழந்தைகளைத் தொட்டிலிலிட்டுத் தாலாட்டிக் கண்ணிற் கருமணியே போற் காப்பாற்றி வந்தார்கள். குழந்தைகள் வளர்ந்தன. பள்ளிக்குச் செல்லும் பருவமுற்றனர். அரசகுமாரனும் மந்திரிகுமாரனும், வேதங்களையும், ஏனைய கலைகளையும், வில்வித்தையையும், பஞ்சகதிகளையும் நன்கு ஓதியுணர்ந்தார்கள். அடக்கம், பொறுமை, அமைதி, வீரம், பணிவு, துணிவு, வாய்மை, தூய்மையாதி நற்குணங்கள், யாவும் அம்மைந்தர்களிடம் தங்கியிருந்தன. வளர்பிறை மதிபோல் வளர்ந்தார்கள். குடிகள் அனைவருடைய மனத்தையும் ஒருங்கே கொள்ளை கொண்டார்கள். அரசனும் மந்திரியும் தமது மக்களின் குணாதிசயங்களைக் கண்டு அற்புதமுற்றார்கள்.

அரசன் ஒருநாள் தனது மந்திரிகளையும் குடிகளையும் வரவழைத்து "பிரஜைகளே! முதுமைப் பருவத்தால் யான் மிகவும் வருந்துகிறேன். இனி என்னால் பூமிபாரந்தாங்க முடியாது. இனித் தவவனஞ் சென்று ஆவியீடேறுவதற்கு வழி தேடுவேன். ஆதலால், என் மைந்தனுக்கு மகுடாபிஷேகஞ் செய்ய எண்ணியிருக்கிறேன். உங்கள் நினைவு யாது" ? என்று வினவினான். எல்லோரும் ஒரே மனதாகச் சம்மதம் என்று மகிழ்ச்சியுடன் ஆரவாரித்தார்கள். நாள் குறிப்பிடப்பட்டது, நகரம் எங்கும் பறையறையப்பட்டது. தோரணங்கள் நாட்டினார்கள், வெண் சுண்ணச்சாந்தால் வீடுகளை அலங்கரித்தார்கள், வீதிகளில் சந்தனக் கலவைகளால் மெழுகிக் கோல மிட்டார்கள், அந்தவூர் இந்திரலோகம் போல் விளங்கியது. 108 பொற்குடங்களில் தீர்த்தத்தை வேதியர்கள் எடுத்து யானைகள் மீது வைத்து மங்கல வாத்தியங்களுடன் கொண்டுவந்தார்கள். குறித்த காலத்தில் அரசன் தன் மைந்தனுக்கு மகுடாபிஷேகம் செய்து வைத்தான். அதே நேரத்தில் மந்திரி தன் மைந்தனுக்கு மந்திரிப் பதவியைக் கொடுத்தான். அரசனும் மந்திரியும் பல தான தருமங்களைச் செய்து தவவனம் புகுந்து தவமேற்கொண்டார்கள்.

மன்னன் மைந்தனும், மந்திரி மைந்தனும் உலகத்தை அரசாட்சி செய்து வந்தார்கள். குடிகளிடத்தில் மிகவும் கருணை பாராட்டினார்கள். அவர்களுக்குப் பட்டாபிஷேகமான பிறகு பன்னிரண்டு ஆண்டுகளாக மழை பொழியவில்லை.

காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது.

நெருக்கடியான நேரத்தில் ஒருவன் செய்த உதவி சிறியதாயிருந்தாலும் உலகத்தை விட மிகப் பெரியதாகும் 102

" விசும்பிற் றுளிவீழி னல்லால்மற் றாங்கே
பசும்புற் றலைகாண் பரிது".

என்ற பொய்யாமொழிப்படி, ஆடு மாடுகட்குப் புல்லுங் கிடைப்பது அரிதாயிற்று. உண்ணீரு மின்றி மனிதர்கள் தத்தளித்தார்கள். எங்கும் பஞ்சம் மிகுந்தது. அந்த ஊரில் எறும்புகட்கும் உணவு கிடைப்பது அரிதாக முடிந்தது. பசியும் நோயும் மிகுந்தன. அரசகுமாரன் பல அறச் சாலைகள் வைத்து ஏழைகளின் பசியையாற்றி இன்முகங்காட்டி உபசரித்தான். எத்துணை அன்னதானஞ் செய்தும் சனங்கள் "பசிபசி" என்று ஏங்கினார்கள். சிறு குழந்தைகள் பாலின்றிப் பரதவித்தன, ஆவினங்கள் உணவின்றி அலைந்தன. பறவைகள் இரையி ன்றிக் கூவின. இப்படி எங்கும் துர்பிக்ஷம் உண்டானதைக் கண்டு, மன்னன் மகன் வருந்தி, மந்திரி மகனை நோக்கி "ஆர்வல! நம்மிரு வருக்கும் முடிசூட்டிய பன்னிரண்டு ஆண்டு களாக வானம் வழங்காதாயிற்று. சராசரங்க ளெல்லாம் உணவின்றி மடிகின்றன. நமது அரசாட்சியின் குற்றமோ? அறிகிலேம். நமது கிராம தேவதையாகிய காளியம்மையை வினவி யறிவோம் வருதி" என்று மந்திரி குமாரனை அழைத்துக் கொண்டு தேரூர்ந்து, ஊர்ப்புறத் திலுள்ள காளிகோயிலையடைந்து, தேர் விட்டிறங்கிப் பயபக்தியுடன் கோயிலுக்குள் நுழைவானாயினான். அக்கோயில் பூசாரியாகிய நமது (முன்கூறியபடி சுரம் வந்து சுகமுற்றவன்) காளிமுத்து, அரசகுமாரனும் மந்திரிகுமாரனும் ஆயுதபானிகளாய்க் காளிகோயிலுக்குள் நுழைவதைக் கண்டு, உடல் நடுங்கி உள்ளம் அஞ்சி,"நாம் ஏதோ குற்றம் செய்து விட்டோம் போலும்? நாள் தோறும் கோயிலுக்கு வருபவர் களிடம் நாம் பொய்யாக ஆவேசமாகப் பணம் பறிப்பதை மன்னனுக்கு யாரோ தெரிவித்து விட்டார்கள் போலும்? அதனால் அரசன் சினந்து நம்மைக் தண்டித்து ஒறுக்க வந்து விட்டார்" என்று எண்ணி, இன்னது செய்வது என்று தோன்றானாய்க் காளியம்மைக்குப் பின் புறத்தில் பதுங்கி ஒளிந்து கொண்டான்.

அரசகுமாரன் மந்திரி மகனுடன் கோயிலுட் புகுந்து காளிதேவதையை வணங்கி, வலம் வந்து கைகூப்பி நின்று "ஏ அகிலாண்டகோடி யீன்ற அன்னையே! தீனதயாபரி! திரிபுரசுந்தரி! கருணாகரி! எனது நாட்டில் மழைத்துளியின்றி மக்கள் வாடுகின்றனரே. இந்தப் பாவியேனுக்கு மகுடந் தரித்த பன்னிரண்டு ஆண்டுகளாக மழையில்லாத காரணம் யாது? என் மாட்டு ஏதாவது குற்றம் உளதா? எம்பெருமாட்டியே! அடியேன் அறிவு வந்த காலந்தொடங்கி மனத்தாலேனும வாக்காலேனும் காயத்தா லேனும பிறவுயிர்கட்குத் தீங்கு செய்யவில்லை யென்பது நின்திருவுள மறியாதோ? அகிலாண்ட நாயகி கருணைக்கடலாகிய என்னிடம் கருணை காட்டாமல் வெறுத்து விட்டால் இக்கணமே நின் திருவடியில் என் உயிரை ஒப்பிக்கிறேன்" என்று கண்ணீர் ததும்பி நாக்குழைய கல்லுங்கரைய முறையிட்டான்.

காளியம்மை அவன் முறைக்கு இரங்கி, "அரசகுமார! நின் அறநெறிக்கும் பக்தியின் மிகுதிக்கும் மகிழ்கின்றோம். நமது சந்நிதியில் ஒரு நரபலி கொடுத்தால் மழை பொழியும் என்று அசரீரியாக மொழிந்தாள். மன்னன் கேட்டு மகிழ்ந்து "மதியின் மிக்க மந்திரியே, அம்பிகையின் திருமொழியினைக் கேட்ட னையோ. குடிகளுக்கு நேர்ந்த இன்னலை நீக்குபவன் அரசன். அரசன் தந்தை ஆதலால் என் மக்களாகிய சனங்கள் சுகமுறும் பொருட்டு இக்கணமே இங்கு என்னைப் பலி கொடுத்து விடு. நீ அரசனாக இருந்து உலத்தை மனுநெறி தவறாமல் அரசாளுதி" என்றான். மந்திரி கேட்டு மனந்துடித்து "மன்னர் மன்ன! நம் குடிகள் சுகமுறும் பொருட்டு அடியேனைப் பலியிடுவீர். அடியேன் இல்லையானாலன்றோ வேறு யோசிக்க வேண்டும்.

"உடுக்கை யிழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு"

என்றபடி, இத்துணைநாள் உம்முடன் ஒருங்கு

**A favour conferred in the time of need, though it be small (in itself), is (in value) much larger than the world.**

102

வளர்ந்து படித்து நட்புற்ற யான் இதற்குத் துணை செய்யேனாயின் உடலினாலாய பயன் தான் என்ன இருக்கிறது? ஆதலால், என்னைப் பலியிடும்" என்றான். அரசகுமாரன் "மந்திரி! என்னே நின் தகைமை! குழந்தைக்கு நோய் வந்தால் தாய் மருந்துண்பதா? அடுத்தவள் மருந்த ருந்துவதா? என் மக்களாகிய பிரஜைகளின் நன்மைக்கு நானல்லவா பலியாக வேண்டும். என் ஆணையை மறுக்காதே. என்னைப் பலியிடுக" என்றான். இப்படி இருவருக்கும் "என்னைப் பலியிடுக" என்றான். இப்படி இருவருக்கும் "என்னைப் பலியிடு" "என்னைப் பலியிடு" என்று வாதம் நிகழ்ந்தது. அரசகுமாரன், மந்திரி! நில்லு காளிதேவியைக் கேட்போம். காளி உன்னைப் பலியிடச் சொன்னால் செய்வோம். அன்றி என்னையிடச் சொன்னால் அதுபடி செய்வோம். அம்பிகையின் திருவுளப்படி நடப்போம். வீணில் வாதம் வேண்டாம்" என்று கூறி, காளியை நோக்கி, "அந்தரி ! அகோரி ! வீரி! பராத்பரி! நான் பலியாகவோ! இந்த மந்திரி பலியாகவோ? நின் திருவுளம் யாது ? என்றான்.

காளிதேவி, அரசபுதல்வ! எனக்குப் பலி நீயும் ஆக வேண்டா, என் பிறகே ஒளிந்திருக்கின்ற பூசாரிதான் பலியாக வேண்டும்" என்றாள். இதனைக் கேட்ட பூசாரி, இடியேறுண்ட நாகம் போல நடுநடுங்கி வெளியே வந்து, காளியைப் பார்த்து, "அடிப்பாவி! என் உயிர்க்குத்தானா உலை வைக்க வேண்டும். 50 ஆண்டுகளாக உன்னை பூசை செய்ததற்குப் பயன் இதுதானா?

அந்தோ! என்னைப் பலிவாங்குவது உனக்குச் சம்மதமா? இதுவா நின்கருணை? பாழுந் தெய்வமே! பலி வாங்குந் தெய்வமே! நீ உலக மாதா என்று பேர் படைத்திருக்கின்றனையே! உன் குழந்தைகளில் நான் ஒருவனல்லவா! ஐயோ! என்னை வீணே பலி வாங்க எண்ணி னையே, இது தகுமா! இது முறையா? இது தருமந்தானா? யாருங் கேட்பாரில்லையா? என்று அலறினான்.

காளிதேவி "பூசாரியே! சற்று அமைதியுடன் கேள் உன்னைப் பலிவாங்க வேண்டுமென்று நான் விரும்பவில்லை, நீ செய்த பாவம் விரும்புகிறது, அறிவிலியே! சில ஆண்டுகளுக்கு முன் மார்கழி மாதம் விடியற்காலை தண்ணீரில் மூழ்கி தயிரன்னம் அருந்தியதால் உனக்குச் சுரநோய் கண்டது. உணவின் மாறுபாட்டால் வந்த சுரநோய்க்கும் சும்மா இருந்த ஆட்டுக்கும் என்ன சமபந்தம்? அக்காலை நீ இரண்டு ஆடுகளைக் கொணர்ந்து பலியிட்டனை. அந்த இரண்டு ஆடுகளும் தான் செய்த நல்வினைப் பயனால் அரசகுமாரனாகவும் மந்திரி குமார னாகவும் பிறந்து உன்னை பலி வாங்க வந்திரு க்கின்றன. மாம்ஸ் என்ற சொல்லுக்கு பொருள் யாது என்பதை நீ உணரவில்லை போலும். மாம் – என்னை, ஸா – உன்னை, "இந்தப் பிறப்பில் என்னைத் துன்புறுத்துகின்றாய், அடுத்த பிறப்பில் உன்னைத் துன்புறுத்த நானே வருவேன்" என்று அந்தச் சொல்லே கூறுகிறது! மூடனே,

"நீ உலகமாதாவல்லவா? உன் குழந்தைகளில் நான் ஒருவனல்லவா! என்னைப் பலிவாங்க லாமா? என்று பிதற்றினையே! நீ எனக்குக் குழந்தையே, உன்னைப்போல் எனக்கு ஆடும் குழந்தைதானே, கோழி, பன்றி, எருமை முதலிய எல்லா உயிர்கட்கும் நான் தாயல்லவா! ஒரு தாயாருக்குப் பல குழந்தைகளிருந்து ஒரு குழந்தை ஊமையாக இருந்தால் அவளுக்கு வாயில்லாக் குழந்தைமேல் அதிக அன்பும் ஆதரவும் இருக்குமல்லவா? அதுபோல மனிதக் குழந்தைகளை விட ஆடு, மாடு, கோழி, பன்றி முதலிய வாயில்லாக் குழந்தைகளிடம் அதிக அன்பு உண்டு. அந்தக் குழந்தைகளை யாருங் கேட்பாரில்லையென்று, அந்தோ! கொடும் பாவிகள் என்முன் பலியிடும்போது என் உள்ளந் துடிக்கிறது. நான் கண்டால் மிக வருந்து வேனென்று திரையிட்டுத் திரைக்கு அப்பாலிருந்து வெட்டுகிறார்கள். அப்படிப் பலியி டுகின்ற பாவிகளுக்கு நான் அந்தப் பிறப்பிலும் மறுபிறப்பிலும் தரித்திரத்தையும் குஷ்டம், சயம், குன்மம் முதலிய நோய்களையும் குருடு, செவிடு, முடம் முதலிய அங்க வீனங்களையும் உண்டா க்குகின்றேன். அதனைக் கண்டும் அறிவில்லாமல் சதா என்முன் என் வாயில்லாக் குழந்தைகளைக் கதறக் கதற வெட்டிப் பலியிடுகிறார்கள்.

பயன்றூக்கார் செய்த வுதவி நயன்றூக்கின்
நன்மை கடலிற் பெரிது.

இவருக்கு இன்னது செய்தால் நமக்கு இன்னது கிடைக்கும் என்று பாராமல் ஒருவன் செய்த உதவியின் அருமையை ஆராய்ந்தால், அதன் நன்மை கடலைவிடப் பெரியதாம்.

அக்கொடுமையை எண்ணும் தோறும் என் இதயம் துடிக்கிறது. இவர்களுக்கு முற்பிறப்பிற் செய்த தீவினையால் நோய் வந்தால் ஆடு, கோழிகள் என் செய்தன? அவைகளைப் பலியிடுவதனால் வரும் பயன் யாது? பலியிடுவதனால் உலகில் இறப்பதே இல்லையா?

ஒரு தாய் தன் மூத்த குழந்தைகள் சற்று வலிவுடையவர்களாயிருந்து, வாயில்லாத இளங்குழந்தைகளைக் கொன்றால் அவள் பொறுப்பாளா? அது அவளுக்குத் திருப்தியைத் தருமா? ஐயோ! ஏழைப்பிராணிகளைக் கொண்டு என் பேர் வைத்துக் கொன்று தின்று திரியும் இப்பாவிகளுக்கு இருபத்தெட்டு நரகங்களும் போதாவே! பூசாரியே! நன்கு இவைகளை எண்ணிப்பார், உனக்கே விளங்கும்.

"பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும்".

என்ற பொதுமறையை நீ படிக்கவில்லையானாலும் கேட்டது மில்லையா? நீ செய்த வினையை நீ தானே அனுபவிக்க வேண்டும்? என்னை வீணே வைது இன்னும் ஏன் பாவத்தைத் தேடிக்கொள்கின்றாய்? ஆதலால், எந்த உயிரை எவன் கொல்கிறானோ மறுபிறப்பில் அந்த உயிர் அவனைக் கொல்ல வருகிறது.பலியினால் வரும் பாவத்தை இப்பொழுதாவது உணர்ந்து, இனி வருபிறப்பிலாவது கொலைத் தொழிலும் புலைப்புசிப்பும் இல்லாத தூயவனாகப் பிறக்கவேண்டும் என்று தெய்வத்தை வேண்டிக்கொள். குற்றத்தை ஒப்புக்கொண்டு, அக்குற்றத்தை நினைத்து, "தவறு செய்து விட்டோமே" என்று வருந்தினால், அந்தப் பாவத்தின் பயன் குறைகிறது. இனியாவது நின் மனத்தில் கருணையுண்டாகட்டும்" என்று காளி தேவி சொன்னாள்.

இவற்றைக் கருத்தூன்றிக் கேட்ட காளிமுத்துப் பூசாரி உண்மையுணர்ந்து தான் செய்த பாவத்தை எண்ணி எண்ணி மனம் பதைத்து, "தாயே! ஆம், அடியேன் செய்தது பெருந்தவறு அந்தோ! அந்தோ! கருணைமிக்க சன்மார்க்க சங்கத்தில் சேராமல் வீணே பொய் யாவேசம் ஆடி உயிர்களைப் பலியிட்டுத் தூய தெய்வக் கோயிலையும் சுடுகாடாக்கிக் கள்குடித்து மருளாடிக் கெட்டேன். என் வரலாற்றை யறிந்தாவது இனி உலகம் உய்க. என்னைப் போன்ற மருளாடிகள் சொல்லை நம்பி இனியாவது உலகம் வாயில்லா ஊமைப் பிராணிகளைப் பலியிடாதிருக்கட்டும். குடிவெறி கொண்ட குடிகெடுக்கும் பூசாரிகள் உடுக் கடித்துத் தங்கள் மேல் தெய்வமே வந்துவிட்ட தாகக் கூக்குரலிடும் பொய்ப் பித்தலாட்டத்தைக் கண்டு ஏமாறாதிருக்கட்டும். ஐயோ! இரண்டு ஆடுகளை வெட்டியதற்கே எனக்கு இந்தக் கதி வந்ததென்றால், கணக்கற்ற ஆடு கோழிகளைப் பலியிடும் பேதைகளுக்கு மறுபிறப்பில் என்ன கதி வருமோ? மேலும் சிறு குழந்தைகளிடத்தில் தாய்க்கு அதிக அன்பு என்பது உலகமறிந் ததாயிற்றே. சிறு சிறு ஆட்டுக் குட்டிகளைப் பலியிடும் வன்கணவர் மீளா நரகுக்கு ஆளாவாரே! பலியினால் வரும் பாவத்தைத் தெரிந்து உலகம் பலியை விலக்கிப் பாற் பொங்கவிட்டு அம்பிகையின் அருளைப் பெறுக. அரசகுமாரரே! இந்தப் பாவியைத் தாமதிக்காமல் பலியிட்டு என் பாவத்தை நீக்கியருள்வீர்" என்று பணிந்து, காளிக்கு முன் தலை குனிந்து நின்றான்.

அரசகுமாரன் காளிதேவியின் ஆணைக்கு அஞ்சி, தனது உடைவாளால் அப்பூசாரியை பலியிட்டான். உடனே "அந்தோ நானும் இவனுடன் பலியாகிறேன்" என்று தன்னையும் வெட்டிக்கொள்ளத் துணிந்தான். அப்போது காளிதேவி பிரசன்னமாகி, அரசகுமாரனைத் தகைந்து "அறமிகு செல்வ! நின் கருணைக்கு மகிழ்வுற்றோம், நினக்கு வேண்டும் வரம் யாது? என்று வினவினான். அரசகுமாரன் அம்பிகையை வணங்கி, "உலகீன்ற அன்னையே! இவன் அறியாமையாற் செய்த இப்பிழையை மன்னிக்க வேண்டும். குற்றத்தை உணர்ந்து வருந்திய போதே பாவம் மன்னிக்கப்படுகிறதல்லவா? ஆதலால் இப்பூசாரியை எழுப்பித் தருவதே எனக்கு முதல் வரமாக நீ கொடுத்தருளல் வேண்டும் என்றான்.

காளியம்மை பூசாரியை எழுப்பித் தந்து

**If we weigh the excellence of a benefit which is conferred without weighing the return, it is larger than the sea. 103**

மழைபொழிவித்துத் தண்ணருள் செய்து மறைந்தாள். அந்தப்பூசாரி அன்று தொடங்கிப் பலியினால் வரும் பாவத்தை எல்லோருக்கும் விளக்கிச் சொல்லுவதே தனது வாழ்க்கையின் பயனாகக் கொண்டு, பலி விலக்குத் தொண்டு புரிந்து, முடிவில் நற்கதியடைந்தான். அரசகுமாரன் மந்திரி குமாரனுடன் இந்த அற்புதங்களைக் கண்டு இறும்பூதுற்று, தனது குடிகளையெல்லாம் தன்னுயிர்போல் மன்னுயிரைக் காக்குமாறு செய்து, அரசாட்சி செய்து வந்தான். காலந்தோறும் வானம் வழங்கியது. பயிர் தழைத்தது. பசியென்பது பறந்தோடியது. மிடி விலகியது. செலவங் கொழித்தது. ஜீவகாருண்யம் அந்நாட்டில் தாண்டவமாடியது. கொல்லாவிரதமே எங்கும் குடிகொண்டது. எல்லோரும் இன்புற்றிருந்தார்கள்.

"கொல்லா விரதங் குவலயம் எல்லாம் ஓங்க
எல்லார்க்குஞ் சொல்வது என்இச்சை பராபரமே"

## பாணலிங்கத்தின் சிறப்பு

பாணாசுரனென்னும் அரசனானவன், பலசாஸ்திரங்களையும் புராணங்களையும் பெரியோர் வாயிலாகக் கேட்டுவரும் பொழுது, ஒரு தினம் சிவலிங்கத்தின் மகிமையைக் கேட்டான். கேட்டது முதல் வேறொன்றும் கேளாமல் சிவபூஜை செய்ய வேண்டுமென்னும் அன்பின் மிகுதியால், சிவபெருமானை நோக்கி அநேக காலம் தவம் செய்தான், அந்தத்தவத்திற்குச் சிவபெருமான் இரங்கி அவனுக்கு வெளிப்பட்டுத் தோன்றி என்ன வேண்டும் என்று அவனைக் கேட்டருள, அப்பொழுது அந்தப் பாணாசுரன், ஆயிரஞ்சிரசும், இரண்டாயிரங்கைகளும் இருப்பதினாலும், சிவபூஜை செய்ய வேண்டும்மென்பதில் மிகுந்த விருப்பம் இருப்பதினாலும் பதினான்கு லோகங்களையும் ஆளவேண்டும் என்னும் ஆசையினாலும், பதினான்கு கோடி சிவலிங்கம் வேண்டுமென்று கேட்டான். அப்பொழுது, சிவபெருமான் இம்மலைக்குச் சமீபத்தில் உள்ள கங்கைக்கரையிலிருந்து தம்முடைய பிரகணங்களைக் கொண்டு, சிவலிங்கங்களை எடுத்துவரச் செய்து, பாணாசுரனுக்குக் கொடுத்து சிவபூசை செய்யும்படி கட்டளையிட்டு கைலாசத்திற்கு எழுந்தருளினார். பின்னர், பாணாசுரன் அவ்வாறே சிவபூசை செய்து, அந்த அரசபோகங்களையெல்லாம் அநேக கோடி காலம் அனுபவித்து, அதன் பின்னர் சிவபெருமான் திருவுளப்படி அந்தப் பதினான்கு கோடி சிவலிங்கங்களையும் ஸ்ரீசைலத்திலும், கங்காநதியின் மத்தியிலும், நீலகண்ட நேபாளமுதல் முக்கிய தலங்களிலும், யமுனைநதியினுடைய மத்தியிலும், மற்றும் புண்ணிய நதியினுடைய மத்தியிலும், கன்னியாகுமரியிலும் வைத்தான். இந்த லிங்கங்களுள் இப்பொழுது காணப்படுவன பல. அவற்றுள் உத்தமமான லிங்கம் எனக் கொள்ளத்தக்கது எந்தலிங்கமெனில், வனப்பும், மிருந்தகனமும், பலவர்ணங்களாகிய சித்திரங்களும், உச்சிக்குழியும், பருக்கைக்கல்லும், பக்கத்தழும்பும், வெடிப்பும் என்னும் குற்றங்களில்லாமல், லிங்கத்திற்கமைந்த ஆவுடையாருடன் நீர்க்குமிழி போலெங்கும் உருண்டையாகவும், கருநாவற்பழம் போல் கறுப்பாகவும், பார்வைக்குப் பிரியமாகவும் உள்ளதாய்த் தன்னுடைய ஆசாரியர் கையினாலே தரப்பட்ட பாணலிங்கம் உத்தமோத்தமமென்று அறிந்து கொள்க. இவ்வாறு காமிகாகமத்திற் சொல்லப்பட்டிருக்கின்றது.

சைவபூஷணம்

தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்றெரி வார்.

ஒருவன் தினையளவாகிய சிறு உதவியையே செய்தானாயிலும் அதன் பயனை அறிந்தவர் அதனைப் பனையளவாக பேருதவியாகக் கருதுவர். 104

# இன்பம் எங்கே?

ஒரு நாள் ஒரு கிழவி ஒரு ஊசியைத் தன் வீட்டிற்குள் துலைத்துவிட்டு அவ்வூசியை வீட்டுக்கு வெளியே சந்திர வெளிச்சத்தில் தேடிக்கொண்டு நின்றாள், அவ்வழியிற் சென்ற ஒரு மனிதன் அக்கிழவியை நோக்கி "பாட்டி நீ எதை இங்கே தொலைத்துவிட்டுத் தேடு கிறாய்" என்று கேட்கக் கிழவி நான் ஊசி ஒன்றை வீட்டுக்குள் தொலைத்து விட்டேன். அங்கே ஒரே இருளாய் இருப்பதால்தான் வெளிச்சத்தில் தேடுகிறேன். இங்கே சந்திரன் பால்போற் பிரகாசிக்கின்றான். கண்ணுக்கும் நல்ல வெளிச்சமாயிருக்கறது, என்று கூறினாள். உலகத்திலுள்ள மக்களும் ஊசியைத் தொலைத்த பாட்டி போன்றவர்களே. தங்கள் உள்ளத்துள் ஆனந்தத்தை வைத்துக் கொண்டு வெளித்தோற்றத்தில் மயங்கி நிலையற்ற இன்பத்தை உண்மையென நம்பி அலைகின்றனர்.

அறிவு கெட்டு மயங்கிய மக்காள் உலகின் நிலையற்ற போக்கைக்கண்டு மயங்காது உங்களுக்குள் உற்றுப்பாருங்கள். உங்கள் மனதைக் கட்டுப்படுத்துங்கள். அப்போது உங்கள் ஆத்மாவிலேயே உண்மையான ஆனந்தத்தைக் காண்பீர்கள். இவ் ஆனந்தத் திற்கு என்றும் அழிவேயில்லை. இது ஒன்றே அழிவற்ற வஸ்து. இவ் ஆனந்தத்தினால் மோட்சம் முத்தியாகிய கைவல்லியம், இறுதி அருள் நிலையை நீங்கள் அடையவும் உதவியாக இருக்கும்.

இன்பத்தை அடையவே எல்லாரும் விரும்புகின்றனர். துன்பத்தை விரும்புவோர் எவரும் இலர். இன்பம் எதுவென்பதை அறியாது துன்பத்தையே இன்பமென மயங்கி அதனால் துன்புறுவோர் பலர். நாய் ஒன்று வெற்றெலும்பைக் கண்டது. உடனே அதனை எடுத்துக்கொண்டு தனியிடம் சென்றது. அவ்வெலும்பு ஐந்து வருடங்களாகக் காய்ந்து தசையோ ஈரப்பசையோ அற்றது. அதனை அந்த நாய் சுவைக்கத் தொடங்கியது. பற்களுக் கிடையில் போட்டுக் கடிக்கத் தொடங்கியது. கடிக்கக் கடிக்க நாயின் முரசிலிருந்து இரத்தம் சொட்டத் தொடங்கியது. அதனை நாய் நன்கு சுவைத்தது. எலும்பிலிருந்து தான் இச்சுவை வருகிறது என்பது நாயின் எண்ணம். இப்படியே தான் மனிதன் தன்னுள்ளே இன்பம் இருக்க இன்பம் வெளியே இருந்துதான் வருகிறது என ஏமாந்து விடுகிறான். துன்பமும் அப்படியே தான். ஒருவனுடைய இன்பத்திற்கும் துன்பத் திற்கும் அவரவரே தான் காரணம். அதுவும் உள்ளே இருந்து வருவதே தவிர வெளியிருந் துவருவதல்ல. இதனை அறியாமலேதான் மனித வாழ்வு நரகக்காடாய்ப் போகின்றது. இன்பச் சுரங்கம் தன்னுள்ளே ஆழ்ந்து கிடப்பதை மனிதன் உணர்ந்து விட்டா னானால் அவன் கற்பனை பண்ணிய துன்பங் களையெல்லாம் விட்டெறிந்து அன்றே அமரனாகிவிடுவான். அவன் தன்னை ஆழ்ந்து நோக்கி இன்பம் அங்கிருப்பதை உணர்கிறான். அதன் பின்னர் உலகின் போற்றுதலுக்கோ தூற்றுதலுக்கோ அவன் செவிசாய்ப்பதில்லை.

இராமனும் வேலனும் அக்கம் பக்கமாக நெல்வயலைக் காவல் புரிபவர்கள். ஒருநாள் காற்றோடு சேர்ந்து மழை சோனாவாரியாகப்

**Though the benefit conferred be as small as a millet seed, those who know its advantage will consider it as large as a palmyra tree. 104**

பெய்ததது. இரவு பத்து மணி இருக்கும். இராமனுக்கு ஒரு சுருட்டுப் புகைக்க வேண்டும் போல் தோன்றியது. கையில் அரிக்கன் விளக்கையும் தூக்கிக்கொண்டு வேலனுடைய குடிசைக்குச் சென்றான். வேலன் குடிசையை இழுத்துப் பூட்டி விட்டு நன்கு தூங்கினான். இராமன் பெரிய சத்தம் போட்டு வேலனை எழுப்பினான். வேலன் உள்ளிருந்த படியே என்ன வேண்டும் என்று வினவினான். குளிர் தாங்கமுடியவில்லை. சுருட்டு ஒன்று பற்ற வைக்கவேண்டும் கொஞ்சம் நெருப்புத்தா என்று கேட்டான். வேலன் நெருப்புப் பெட்டியைக்கையிலே எடுத்துக்கொண்டு வெளியே வந்தான். இராமன் விளக்குடன் நிற்பதைக் கண்டான். கையில் விளக்கை வைத்துக் கொண்டு நெருப்பிற்கு இவ்வளவு தூரம் காற்றிலும் மழையிலும் வந்தாயே விளக்கில் நெருப்பைப் பற்றவைத்துக் கொள்ளலாமே. எனது தூக்கத்தையும் கெடுத்தாயே என்றான் வேலன். இராமன் அப்பொழுதுதான் தன்னிடம் நெருப்பு இருப்பதை உணர்ந்தான். வேலனின் நெருப்புப் பெட்டிக்காகக் காத்திருக்கவில்லை உடனே தனது குடிசைக்குத் திரும்பி நெருப்பைப் பற்ற வைத்துக் குளிரைப் போக்கிக் கொண்டான்.

இராமனைப் போல் தன்னை மறந்தவர்கள் பலர் உளர். தம்முள் இருக்கும் இன்பத்தை மறந்தவரும் இன்னும் பலராவர். வேலன் செய்த வேலையைத்தான் குருமாரும் ஞானிகளும் செய்கின்றார்கள். குரு தமது ஆத்ம சக்தி மூலம் சிஷ்யனை அவன் யார் என்பது பற்றி உணரச் செய்கிறான். சிஷ்யன் தன்னை யாரென்று உணர்ந்ததும். நம்பிக்கையினாலும் முயற்சியினாலும் குருவின் நிலையை அடைந்து விடுகிறான். குருவின் உப தேசத்தைப் பெற்றும் முயற்சி செய்யா விடில் பழைய கறுப்பனாகவே தான் இருக்க வேண்டும். ஆதலால் அன்பர்களே இன்பம் என்பது உங்களுள்ளேயே உள்ளது. நீங்கள் இன்பம் அடைய வேண்டுமானால் இரவுபகல் சலியாது உழையுங்கள். உழைப்பு வீண்போவதில்லை. நீங்கள் நினைத்தபடி இன்பம் வெளியிலே இருந்து வருவதில்லை. உங்கள் உள்ளேயே இருப்பதைக் காண கிறீர்கள்.

நன்றி

ஆத்மஜோதி துர்முகி கார்த்திகை

## பஞ்சோபசாரங்கள்

கிழங்கு, மூலம், பழம், சந்தனம், புஷ்பம், அமுது முதலாயின பார்த்திப (பிருதிவி) உபசாரம். பால், தயிர், திருமஞ்சனம், சர்க்கரை, வஸ்திரம் முதலியன ஜலமயமான உபசாரம். நெய்த்தீபம், ஆபரணம், ரத்தினம் முதலியன அக்கினி சம்பந்தமான உபசாரம். தூபம் சாமரம் முதலியன வாயுசம்பந்தமான உபசாாரம். மணி, கீதம், முகவீணை முதலியன ஆகாச சம்பந்தமான உபசாரம்.

உதவி வரைத்தன் றுதவி யுதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து.

கைம்மாறாகச் செய்யும் உதவி, முன்பு தான் பெற்ற உதவியின் அளவை உடையதன்று. அவ்வுதவியை ஏற்றுக் கொண்டவரது மேன்மையின் அளவை உடையதாகும். 105

சைவ வினாவிடை

# நித்திய கருமவியல்

- ஆறுமுகநாவலர்

## போசனம்

(1) போசனபந்திக்கு யோக்கியர் யாவர் ?
சமசாதியாராயும், சிவதீக்ஷை பெற்றவரா யும், நியமாசாரமுடையராயும் உள்ளவர்.

(2) போசனஞ் செய்தற்குரிய தானம் யாது ?
வெளிச்சம் உடையதாய்ப், பந்திக்கு உரியரல்லாதவர் புகப்பெறாததாய்க், கோமயத்தினாலே மெழுகப்பட்டதாய் உள்ள சாலை.

(3) போசனத்துக்குரிய பாத்திரங்கள் யாவை?
வாழையிலை, மாவிலை, புன்னையிலை, தாமரையிலை, இருப்பையிலை, பலாவிலை, சண்பகவிலை, வெட்பாலையிலை, பாதிரி யிலை, பலாசிலை, சுரையிலை, கமுகமடல் என்பவைகளாம். வாழையிலையைத் தண்டுரியாது அதனுடைய அடி வலப் பக்கத்திலே பொருந்தும் படி போடல் வேண்டும். கல்லை தைக்கு மிடத்துக், கலப் பின்றி ஒருமரத்தினிலை கொண்டே ஒரு கல்லை முழுதுந் தைத்தல் வேண்டும்.

(4) போசன பாத்திரங்களை எப்படி இடம் பண்ணிப் போடல் வேண்டும்?
போசன பாத்திரங்களைச் சலத்தினாலே செவ்வையாகக் கழுவி, ஒவ்வொருவருக் கும் ஒவ்வொரு முழவளவை சதுரக் கிரமாகப் புள்ளியின்றி மெழுகி, அதன் மேலே போடல் வேண்டும்.

(5) இலை போட்டபின் யாது செய்தல் வேண்டும்?
அதிலே நெய்யினாலே புரோக்ஷித்து, லவணம், கறி, அன்னம், நெய் பருப்பு இவை களைப் படைத்தல் வேண்டும்.

(6) போசனம் எப்படிப் பண்ணல் வேண்டும் ?
இரண்டு கால்களையும் முடக்கி இடமுழந் தாளின் மேலே இடக்கையை ஊன்றிக் கொண்டிருந்து, விதிப்படி அன்ன முதலியவற்றைச் சுத்தி செய்து, சிவபெரு மானுக்கும் அக்கினிக்குங் குருவுக்கும் நிவேதனம் பண்ணி, அன்னத்திலே பிசையத் தக்க பாகத்தை வலக்கை யினாலே வலப்பக்கத்திலே வேறாகப் பிரித்துப் பருப்பு நெய்யோடு பிசைந்து, சிந்தாமற் புசித்தல் வேண்டும்; அதன்பின் சிறிது பாகத்தை முன் போலப் பிரித்து, புளிக்கறியோடாயினும். ரசத்தோடாயினும் பிசைந்து புசித்தல் வேண்டும். கறிகளை இடையிடையே தொட்டுக்கொள்ளல் வேண்டும். இலை யிலுங் கையிலும் பற்றறத் துடைத்துப் புசித்தபின், வெந்நீரேனுந் தண்ணீரேனும் பானம் பண்ணல் வேண்டும். உமிழத் தக்கதை, இலையின் முற் பக்கத்தை மிதத்தி, அதன்கீழ் உமிழ்தல் வேண்டும்

7) போசனம் பண்ணும் பொழுது செய்யத் தகாத குற்றங்கள் எவை ?
உண்பதற்கிடையில் உப்பையும் நெய்யை யும் படைத்துக்கொள்ளல், போசனத்துக்கு உபயோகமாகாத வார்த்தை பேசுதல், சிரித்தல், நாய், பன்றி, கோழி, காகம், பருந்து, கழுகு என்பவைகளையும், புலையர் ஈனர் அதீக்ஷிதர் விரதபங்கமடைந்தவர் பூப்பு டையவள் என்பவர்களையும் பார்த்தல் முதலியனவாம்.

(8) புசிக்கும் போது அன்னத்திலே மயிர் ஈ எறும்பு கொசுகு முதலியன காணப்படின் யாது செய்யதல் வேண்டும்?
அவைகளைச் சிறிதன்னத்தோடு புறத்தே நீக்கிவிட்டுக், கை கழுவிக்கொண்டு,

**The benefit itself is not the measure of the benefit, the worth of those who have received it is its measure.**

சலத்தினாலும் விபூதியினாலுஞ் சுத்தி பண்ணிப் புசித்தல் வேண்டும்.

**(9) போசனம் முடிந்தவுடன் யாது செய்தல் வேண்டும் ?**

எழுந்து, வீட்டுக்குப் புறத்தே போய்க், கை கழுவி விட்டுச், சலம் வாயிற்கொண்டு, பதினாறுதரம் இடப்புறத்திலே கொப்பளித்து, வாயையுங் கைகளையுங் கால்களையுங் கழுவி, ஆசமனம் பண்ணி, விபூதி தரித்தல் வேண்டும். அன்ன மல்லாத பண்டங்கள் புசிக்கின், எட்டுத்தரங் கொப்பளித்து, ஆசமனம் பண்ணல் வேண்டும்.

**(10) உச்சிட்டத்தை எப்படி அகற்றல் வேண்டும்?**

இலையை எடுத்து எறிந்துவிட்டுக் கை கழுவிக்கொண்டு, உச்சிட்டத் தானத்தைக் கோமயஞ் சேர்ந்த சலந்தெளித்து, இடையிலே கையை யெடாமலும் முன்பு தீண்டிய விடத்தைப் பின்பு தீண்டாமலும் புள்ளியில்லாமலும் மெழுகிப், புறத்தே போய்க், கை கழுவிவிட்டுப், பின்னும் அந்தத் தானத்திலே சலந் தெளித்துவிடல் வேண்டும்.

**(11) போசனம் செய்தபின் வாக்குச்சுத்தியின் பொருட்டு யாது செய்தல் வேண்டும்?**

இல்வாழ்வார் தாம்பூலம் ஒருதரம் மாத்திரம் புசிக்கலாம்; துறவிகள் கிராம்பு, ஏலம் கடுக்காய், சுக்கு, வால் மிளகு என்பவை களுள் இயன்றதொன்றைப் புசித்தல் வேண்டும்.

**(12) இராத்திரியில் எத்தனை நாழிகையி னுள்ளே புசித்தல் வேண்டும் ?**

எட்டு நாழிகையினுள்ளே புசித்தல் உத்தமம். பதினொரு நாழிகை யளவேல் மத்திமம்; பதினான்கு நாழிகையளவேல் அதமம்; அதன்மேற் புசிக்கலாகாது.

**(13) போசன காலத்தில் விளக்கவியின் யாது செய்தல் வேண்டும் ?**

போசனம் பண்ணாது, அவ்வன்னத்தை வலக்கையினாலே மூடி, விளக்கேற்றி வருமளவும் ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை மானச மாகச் செபித்துக் கொண்டிருந்து, விளக் கேற்றியபின், பானையில் அன்னத்தை இடுவித்துக்கொள்ளாது, அவ்வன்னத் தையே புசித்துக்கொண்டு எழும்பல் வேண்டும்.

## சயனம்

**(14) எப்படி சயனித்தல் வேண்டும் ?**

கிழக்கேயாயினும் மேற்கேயாயினும் தெற்கேயாயினுந் தலை வைத்துச், சிவபெருமானைச் சிந்தித்துக்கொண்டு, வலக்கை மேலாகச் சயனித்தல் வேண்டும். வடக்கே தலை வைக்கலாகாது. வைகறை யில் நித்திரைவிட்டெழுந்துவிடல் வேண்டும். சந்தியாகாலத்தில் நித்திரை செய்தவன் அசுத்தன்; அவன் ஒரு கருமத்துக்கும் யோக்கியனாகான்; அவன் தான் செய்த புண்ணியத்தை இழப்பன்; அவன் வீடு சுடுகாட்டுக்குச் சமம்.

**(15) இரவிலே காலம் பெறச் சயனித்து வைகறையில்விழித்தெழுந்து விடுதலி னாற் பயன் என்னை?**

சூரியன் உதிக்க ஐந்து நாழிகை உன்டென்னுங் காலம் பிராமீமுகூர்த்தம் எனப் பெயர் பெறும்; சிவத்தியானத்துக்கு மனந்தெளிவது அக்காலத்தேயாம்; அன்றியும், அக்காலத்தில் விழிகின் நோய்கள் அனுகாவர்ம். இராநித்திரைப் பங்கமும், வைகறை நித்திரையும், பகல் நித்திரையும், பற்பல வியாதிகளுக்குக் காரணம்.

மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க
துன்பத்துட் டுப்பாயார் நட்பு.

குற்றமற்றவரின் உறவை மறக்கலாகாது. துன்பக் காலத்தில் துணையானவரின் நட்பை விடலாகாது.

# திருவங்கமாலை

- திருநாவுக்கரசு சுவாமிகள்

நான்காம் திருமுறை பண் - சாதாரி

திருச்சிற்றம்பலம்

தலையே நீ வணங்காய் - தலை
மாலை தலைக்கணிந்து
தலையா லேபலிதேருந் தலைவனைத்
தலையே நீ வணங்காய். 1

கண்காள் காண்மின்களோ - கடல்
நஞ்சுண்ட கண்டன் றன்னை
எண்டோள் வீசிநின் றாடும்பி ரான்றன்னைக்
கண்காள் காண்மின்களோ. 2

செவிகாள் கேண்மின்களோ - சிவன்
எம்மிறை செம்பவள
எரிபோன் மேனிப்பி ரான்றிற மெப்போதும்
செவிகாள் கேண்மின்களோ. 3

மூக்கே நீமுரலாய் - முது
காடுறை முக்கண்ணனை
வாக்கே நோக்கிய மங்கைம ணாளனை
மூக்கே நீமுரலாய். 4

வாயே வாழ்த்துகண்டாய் - மத
யானை யுரிபோர்த்துப்
பேய்வாழ் காட்டாகத் தாடும்பிரான் றன்னை
வாயே வாழ்த்துகண்டாய். 5

நெஞ்சே நீ நினையாய் - நிமிர்
புன்சடை நின்மலனை
மஞ்சா டும்மலை மங்கைம ணாளனை
நெஞ்சே நீ நினையாய். 6

கைகாள் கூப்பித்தொழீர் - கடி
மாமலர் தூவிநின்று
பைவாய்ப் பாம்பரை யார்த்த பரமனைக்
கைகாள் கூப்பித்தொழீர். 7

ஆக்கை யாற்பயனென் - அரன்
கோயில் வலம்வந்து
பூக்கையா லட்டிப் போற்றியென் னாதவிவ்
ஆக்கை யாற்பயனென். 8

கால்க ளாற்பயனென் - கறைக்
கண்ட னுறைகோயில்
கோலக் கோபுரக் கோகர ணஞ்சூழாக்
கால்க ளாற்பயனென். 9

உற்றா ராருளரோ - வுயிர்
கொண்டு போம்பொழுது
குற்றா லத்துறை கூத்தனல் லானமக்
குற்றா ராருளரோ. 10

இறுமாந் திருப்பன் கொலோ - வீசன்
பலகணத் தெண்ணப்பட்டுச்
சிறுமா னேந்திதன் சேவடிக் கீழ்ச்சென்று
இறுமாந் திருப்பன் கொலோ. 11

தேடிக் கண்டுகொண்டேன் - திரு
மாலொடு நான்முகனும்
தேடித் தேடொணாத் தேவனை யென்னுளே
தேடிக் கண்டுகொண்டேன். 12.

திருச்சிற்றம்பலம்

**Forget not the benevolence of the blameless, forsake not the friendship of those who have been your staff in adversity.**

**106**

சைவ சித்தாந்த சாத்திரக் கட்டுரைத் தொடர்

# உண்மை விளக்கம்

- மெய்கண்டார் அடியவன்

பா.23.

ஆறாறு தத்துவமும் சொன்னோம் அடைவாக:
மாறா மலம் இரண்டும் வா சொல்ல; - கூறில்
அறியாமை ஆணவம்; நீ ஆனசுகதுக்கம்
குறியா வினை என்று கொள்.

ஆறு ஆறு தத்துவம் ஏது? என்னும் சீடனின் முதலாவது வினாவிற்கு விரிவான விடை அளித்த குரு முதல்வர் ஆணவம் ஏது? வினை ஏது? என்னும் இரண்டாம் மூன்றாம் வினாக்களுக்கு மிகச் சுருக்கமாக விடை அளிக்கின்றார். ஆணவம் ஏது? என்பதற்கு விடை அறியாமை ஆணவம்; வினை ஏது? என்பதற்கு விடை நீயான சுகதுக்கம் வினை.

தத்துவம் ஏது? ஆணவம் ஏது? வினை ஏது? என்பவை பொய் காட்டிப் பொய்யகற்றிப் போதாநந்தப் பொருளாம் மெய்காட்டும் மெய்கண்டாய் விண்ணப்பம் எனச் சீடன் கூறுவதில் "பொய்காட்டி" என்பதில் அடங்கு வனவாம்.

இது வரை மெய்கண்டாரின் விளக்கத்தைக் கேட்ட சீடர் பின்னர் யாது கூறுகின்றார் என்பதை அடுத்த வெண்பா உரைக்கின்றது.

பா.24.

ஆறாறு தத்துவமும், ஆணவமும் வல்வினையும்
மாறா அருளால் வகுத்து உரைத்தீர் - வேறாகா
என்னை எனக்கு அறியக் காட்டீர், இவை கண்டேன்
உன்னரிய தேசிகரே ! உற்று.

என்னை எனக்கு அறியக் காட்டுதல் என்பது ஆன்மாதன்னை அறியச் செய்தல் ஆகிய ஆன்ம தரிசனமாகும்.

குரு சீடனின் வினாவுக்குப் பின்வருமாறு கூறுகின்றார்.

பா.25.

நன்றா உரைக்கக் கேள்! நல்ல சித்தின் முன் அசித்து இங்கு
ஒன்றாது: சித்து அசித்தை ஓராது: - நின்று இவற்றை
அன்றே பகுத்து அறிவது ஆன்மாவே: என்று மறை
குன்றாமல் ஓதும் குறித்து.

நல்ல சித்து – சிவம், அசித்து – பாசம், இவற்றை – பதி, பாசத்தை, சித்து அறிவுள்ள பொருள், அசித்து – அறிவில்லாத சடப்பொருள். சித்தாகிய சிவத்தையும், அசித்தாகிய பாசத்தையும் பகுத்து அறிவது ஆன்மாவே எனச் சிவாகமங்கள் சொல்கின்றன.

பா. 26.

தத்துவங்கள் ஆறுஆறும் தம்மைத்தாம் அறியா:
எத்தன்மை என்னில், இயம்பக் கேள் - சுத்தமாம்
ஆறு சுவையும் அறியாது தன்னைத் தான்
கூறில் அவை இவைபோற் கொள்.

சுத்தமான அறுவகைச் சுவையும் தன் சொரூபத்தைத் தான் அறியாது, அது போல முப்பத்தாறு தத்துவங்களும் தம்முடைய சொரூபத்தைத் தாம் அறிய மாட்டா. அறு சுவையையும் உண்பவன் அறிவது போல முப்பத்தாறு தத்துவத்தையும் பொருந்திவரும் ஆன்மாவாகிய நீ அறிவாய் எனக் குரு கூறு கின்றார்.

பா.27.

ஆறு சுவையும் அருந்தி அவை தம்மை
வேறு ஒருவன் கூறியிடும் மேன்மை போல் - ஆறுஆறும்
ஒன்று ஒன்றாய் நாடி உணர்ந்து ஓதில் அதில் உற்று அறிவாய்
நின்ற பொருள் தானே காண் நீ.

"நான் ஏது?" என்னும் நான்காம் வினாவுக்குக் குருவின் விடை பெற்ற சீடனின் "நீ ஏது?" என்னும் ஐந்தாம் வினாவும், குருவின் விடையும்

எழுமை யெழுபிறப்பு முள்ளுவர் தங்கண்
விழுமந் துடைத்தவர் நட்பு.

நன்றியுடையவர், தங்கள் துன்பத்தைப் போக்கியவருடைய நட்பினை ஏழேழு பிறவியிலும் நினைப்பர்.

அடுத்த வெண்பாவில் பின்வருமாறு உள.

பா. 28.

குன்றா அருளாலே கூறினீர், என் வடிவு
பொன்றா நும் உருவம் போதியீர் - நின்று அருக்கன்
கண்ணுக்குக் காட்டுமா போலே உனது அறிவில்
நண்ணிஅறி வித்திடுவோம் நாம்.

சீடன்: குருநாதரே, குறைவில்லாத அருளாலே ஆன்மாவின் ரூபத்தை - என் வடிவை உபதேசித்தீர். இனி, நும் உருவத்தை - சிவ ரூபத்தை உபதேசிக்குமாறு பணிகின்றேன்.

குரு: கண்களுக்குக் கதிரவன் - அருக்கன் காட்டுவது போல உன் அறிவுக்கு அறிவாய் நின்று நாம் அறிவித்திடுவோம். ஐம்பொறிகள் உயிரின் துணையில்லாமல் ஒன்றையும் தாமாக அறியமாட்டா. அதுபோல, நாம் உன் அறிவில் நின்று, உன்னை உணரச் செய்கின்றோம் எனச் சீடர்க்குக் குரு தம் ஞான சொரூபத்தைக் காட்டுகின்றார்.

பா. 29.

அன்றியும் கேள் ஆன்மாவால் ஆய்ந்து அறியும் ஐம்பொறிகள்
இன்றி அறியா இவை என்ன - நின்றது போல்
ஓவாமல் உன்னை உணர்த்துவோம் உன் அறிவின்
மேவாமல் மேவி நாமே.

பா. 30.

அக்கரங்கட்கு எல்லாம் அகரவுயிர் நின்றாற் போல்
மிக்க உயிர்க்கு உயிராய் மேவினோம் - எக்கண்ணும்
நில்லா இடத்து உயிர்க்கு நில்லாது அறிவு என்று
நல்லாகமம் ஓதும் நாடு.

எழுத்துக்கள் எல்லாவற்றிலும் அகரவுயிர் நிற்கின்றது போல யாம் (சிவகுரு) எல்லா உயிர்க்கும் உயிராய் இருக்கின்றோம். யாம் நில்லாத இடத்து உயிர்க்கு அறிவு நில்லாது. சிவாகமங்கள் இவ்வாறு உணர்த்துகின்றன. ஆராய்ந்து கொள்.

இதுவரை குருவிடம் ஐந்து வினாக்களுக் குத் தக்க விடை பெற்ற சீடர் பின்வருமாறு ஆறாம் வினாவை முன் வைக்கின்றார்.

பா. 31.

நற்றவத்தோர் தாம்காண நாதாந்தத்து அஞ்செழுத்தால்
உற்ற உருவாய் நின்ற ஆடல் உள்ளபடி - பெற்றிடநான்
விண்ணார் பொழில் வெண்ணெய் மெய்கண்டநாதனே!
தண்ஆர் அருளாலே சாற்று.

விண்ணவரை ஓங்கி நிற்கும் சோலைகள் சூழ்ந்த திரு வெண்ணெய் நல்லூர் மெய்கண்ட நாதரே! குளிர்ச்சி பொருந்திய திருவருளாலே நல்ல தவத்தினைச் செய்தவர்கள் காணும்படி நாதமுடிவிலே திரு வைந்தெழுத்துக்களாலே பொருந்திய ஞான சொரூபமாக நின்று கூத்து ஆடல் செய்வதை அடியேன் உள்ளபடி காணச் சொல்.

குரு பின்வருமாறு கூறுகின்றார்.

பா. 32.

எட்டும் இரண்டும் உருவான லிங்கத்தே
நட்டம் புதல்வா! நவிலக்கேள் - சிட்டன்
சிவாயநம என்னும் திருவெழுத்து அஞ்சாலே
அபாயம் அற நின்றுஆடு வான். (நட்டம் - நடனம்.)

எட்டும் இரண்டும் பத்து. அது தமிழில் ய என்னும் எழுத்தால் குறிக்கப்படும். ய - உயிரின் அடையாளம். தீ ஏதாவது ஒன்றைப் பற்றி நின்று தன் தொழிலைச் செய்வது போல இறைவன் உயிர்களில் தங்கி நின்றே ஐந்தொழில் செய்கின்றான். சிட்டன் - இறைவன். சிவாயநம என்னும் ஐந்து எழுத்தையுமே திருமேனி யாகக் கொண்டு உயிர்களின் பிறப்பு, இறப்பு என்னும் அபாயம் அறும்படி நின்று ஆடு கின்றான் என அறிக.

ஐயனே, நல அம்பலத்தான், ஆடும் இயல்பைக் கேள் என மேலும் குரு பின் வரும் பாடலில் விளக்குகின்றார்.

பா. 33.

ஆடும் படி கேள், நல் அம்பலத்தான் ஐயனே!
நாடும் திருவடியிலே நகரம்: - கூடும்
மகரம் உதரம்: வளர்தோள் சிகரம்:
பகரும் முகம்வா: முடியப்பார். (ய - பார் - யப்பார்)

ந - திருவடி; ம - வயிறு; சி - தோள் ; வா - முகம்; ய - முடி; உதரம் - வயிறு; சிகரம் - சி.

**(The wise) will remember throughout their seven - old births the love of those who have wiped away the falling tear from their eye. 107**

பா. 34.

சேர்க்கும் துடி சிகரம்: சிற்கணவா வீசுகரம்:
ஆர்க்கும் யகரம் அபயகரம்: - பார்க்கில் இறைக்கு
அங்கிகு நகரம்: அடிக்கீழ் முயலகனார்
தங்கும் மகரமது தான்.

சி - துடி - உடுக்கை; வா - வீசுகரம்; ய - அபயகரம்; ந - தீ; ம - முயலகன்;

வீசுங்கை ஞானமயமான திருவருளைக் குறிக்கும். நடராச வழிபாடு செய்வோர் இத்திருப்பாடல்களிலே கண்டது போல் ஒவ்வோர் உறுப்பையும் சுட்டிப் பஞ்சாட்சர வழிபாடு செய்வர்.

பா. 35.

ஓங்காரமே நல்திருவாசி உற்று அதனின்
நீங்கா எழுத்தே நிறைசுடராம் - ஆங்காரம்
அற்றார் அறிவர் அணி அம்பலத்தான் ஆடல் இது
பெற்றார் பிறப்பு அற்றார் பின்.

தொடரும்.

திருச்சிற்றம்பலம்.

## நினைவிற் கொள்வதற்கு

| | | | | |
|---|---|---|---|---|
| மாசி | 1 | 13.02.2001 | செவ்வாய் | மாதப்பிறப்பு |
| | 6 | 18.02.2001 | ஞாயிறு | ஏகாதசி விரதம் |
| | 7 | 19.02.2001 | திங்கள் | காரியார் குருபூசை |
| | 8 | 20.02.2001 | செவ்வாய் | பிரதோஷ விரதம் |
| | 9 | 21.02.2001 | புதன் | மகா சிவராத்திரி விரதம் |
| | 11 | 23.02.2001 | வெள்ளி | கோட் செங்கட்சோழர் குருபூசை |
| | 15 | 27.02.2001 | செவ்வாய் | சதுர்த்தி விரதம் |
| | 17 | 01.03.2001 | வியாழன் | ஷஷ்டி விரதம், கார்த்திகை விரதம் |
| | 19 | 03.03.2001 | சனி | கச்சியப்ப சிவச்சாரியார் குருபூசை |
| | 22 | 06.03.2001 | செவ்வாய் | ஏகதாசி விரதம் |
| | 23 | 07.03.2001 | புதன் | பிரதோஷ விரதம் |
| | 24 | 08.03.2001 | வியாழன் | நடேசர் அபிஷேகம், மாசிமகம் |
| | 25 | 09.03.2001 | வெள்ளி | பூரணை விரதம் |
| | 26 | 10.03.2001 | சனி | திருவள்ளுவர் குரு பூசை |
| | 27 | 11.03.2001 | ஞாயிறு | எறிபத்தர் குருபூசை |
| | 29 | 13.03.2001 | செவ்வாய் | சங்கடஹர சதுர்த்தி விரதம் |

நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று.

ஒருவர் செய்த நன்மையை மறப்பது அறமாகாது. அவர் செய்த தீமையை அப்பொழுதே மறப்பது அறமாகும். 108

# திருத் தசாங்கம்

- மட்டுவில். ஆ. நடராசா

"படைகுடி கூழமைச்சு நட்பரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு".

என்கிறார் திருவள்ளுவர்.

இது அரசியலில், இறைமாட்சி என்னும் அதிகாரத்தில் இடம் பெறும் முதலாவது குறள்.

படையும் குடியும் கூழும் அமைச்சும் நட்பும் அரணும் என்று சொல்லப்படும் ஆறு அங்கங் களையுமுடையவன் அரசருள் ஏறு போல்வான் என்பது இத் திருக்குறளின் கருத்து. கூழ் - உணவு. ஈண்டுக் "குடி" என்றது அதனையுடைய நாட்டினை. கூழ் என்றது அதற்கு ஏதுவாகிய பொருளை. அமைச்சு, நாடு, அரண், பொருள், படை, நட்பு என்பதே முறையாயினும் ஈண்டுச் செய்யுள் நோக்கிப் பிறழ வைத்தார். ஆறும் உடையான் என்றதனால் அவற்றுள் ஒன்று இல்வழியும் அரசன் நீதி செல்லாது என்பது பெற்றாம். வட நூலார் இவற்றிற்கு 'அங்கம்' எனப் பெயர் கொடுத்ததூஉம் அது நோக்கி, ஏறு என்பது உபசார வழக்கு.

'இதனான் அரசற்கு அங்கமாவன இவை என்பதூஉம் இவை முற்றும் உடைமையே அவன் வெற்றிக்கு ஏது என்பதூஉம் கூறப்பட்டன' என்பது மேற் கூறப்பட்ட குறளுக்கு பரிமேலழகர் கூறும் விளக்க உரை.

இறைமாட்சி பற்றிக் கூறும் வள்ளுவர், "முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட் கிறையென்று வைக்கப் படும்" என்கின்றார். இறை - கடவுள். இறைவன் பங்கயத் தயனும் மாலும் அறியொணா நீதி, ஆன்மாக்களுக்கு அவரவர் வினைகள் நாடி அவற்றுக் கேற்ற இன்ப துன்ப அனுபவங்களைக் கொடுக்கும் நீதிமான். அவ்விறைவனை முறை செய்யும் மன்னனுக்கு உவமையாகக் கூறியிருக்கிறார் வள்ளுவர். அவர் உவமையாகக் கூறிய கடவுளின் அரசாட்சி யையும் முறைசெய்து காப்பாற்றும் அரசனின் ஆட்சியையும் ஒப்பிட்டு நோக்குவோம். வள்ளுவர் அரசனுக்கு சடாங்கம்- ஆறு அங்கம் - கூறுவது போல, மாணிக்கவாசக சுவாமிகள் கடவுளுக்கு தசாங்கம் - பத்து அங்கம் - கூறுகின்றார். அவை பெயர், நாடு, ஊர், ஆறு, மலை, ஊர்தி, படை, பறை, தார், கொடி என்பன.

"பேர்நாடு ராறுமலை பெயரூர்தி படைமுரசு
தார்கொடியெ லாமரற்குச் சாற்றல் தசாங்கம்"

என்பது திருவாசக உண்மை. தார் - மாலை

மாணிக்கவாசக சுவாமிகள் கூறும் நாடு, ஊர் ஆறு, மலை என்பன வள்ளுவர் கூறும் நாடு என்பதனுள் அடங்கும். " நாடென்ப நாடா வளத்தன" என வள்ளுவர் கூறுதலால் அவர் கூறும் பொருள் என்னும் அங்கமும் நாடென பதில் அடங்கும். ஆறங்கத்தில் ஒன்றாகப்படை கூறப்படுவது போலவே தசாங்கத்திலும் படை கூறப்படுகிறது. வள்ளுவர் ஆறங்கத்திற் கூறும் அமைச்சு, அரண், நட்பு என்னும் மூன்றும் தசாங்கத்திற் கூறப்படவில்லை. தசாங்கத்திற் கூறப்படும் பெயர் ஊர்தி, பறை, தார், கொடி என்பவற்றை அரசனுக்குரிய அங்கங்களாக வள்ளுவர் கூறாவிட்டாலும் அவை அரசனுக்கு வேண்டப்படும். அதனால் மாணிக்கவாசக சுவாமிகள் இவற்றைத் தசாங்கத்திற் கூறி யிருக்கின்றார். வள்ளுவரால் ஆறங்கத்திற் கூறப்பட்டனவும் அரசுக்கு இன்றியமையாது வேண்டப்படுவனவுமாகிய அமைச்சு, அரண், நட்பு என்பன தசாங்கத்திற் கூறப்படவில்லை.

**It is not good to forget a benefit , it is good to forget an injury even in the moment (in which it is inflicted). 108**

" ஆறும் உடையான் என்றதனால் அவற்றுள் ஒன்று இல்வழியும் அரசன் நீதிசெல்லாது" என்று பரிமேலழகர் விளக்கங் கூற, மேற்கூறிய மூன்றும் தசாங்கத்திற் கூறப்படாமைக்குக் காரணம், அவை இன்றியே இறைவன் நீதி செல்லும் என்பதை உணர்த்துவதற் காகலாம்.

இறைவன் இயல்பாகவே பாசங்களினீங்கிய முற்றறிவினன். ஆதலால் அரசனுக்கு வேண்டப் படும் அமைச்சு இறைவனுக்கு வேண்டப்படாது. அவன், தன்வயத்தனும் முடிவிலாற்றல் உடைய வனுமாதலால், அவனுக்கு வினையிடத்து உதவுவதாய நட்பு வேண்டப்படுவதுபோல இறைவனுக்கு வினையிடத்துதவுவதாகிய நட்பும் அரணும் வேண்டப்படா. அதனாற் கடவுளை முறைசெய்து காக்கும் மன்னனுக்கு உவமையாக வள்ளுவர் கூறுவது, முறைசெய்து காப்பதற்கு மாத்திரம் கூறும் ஒருபுடை உவமையேயாகும். அது முற்றுவமை யாகாது.

இனி, தசாங்கத்தை நோக்குவோம். தசாங்கத்தில் அங்கத்திற் கொன்றாகப் பத்துப் பாடல்கள் பாடப்பட்டிருக்கின்றன. இப்பாடல்கள் ஒவ்வொன்றும் கிளியை விளித்து, அதனிடம் ஒவ்வொரு அங்கத்தை பற்றியும் வினாவி, அதற்கு இவ்வாறு விடை கூறெனக் கூறுவது போன்று அமைந்திருக்கின்றது.

"ஏரார் இளங்கிளியே எங்கள் பெருந்துறைக் கோன்
சீரார் திருநாமம் தேர்ந்துரையாய் - ஆரூரன்
செம்பெருமான் வெண்மலரான் பாற்கடலான் செப்புவபோல்
எம்பெருமான் தேவர்பிரான் என்று.

என்பது முதலாவது பாடல். இதில் பெயர் பற்றிக் கூறப்படுகின்றது. "ஏரார் இளங்கிளியே எனக் கிளியை விளித்த மாணிக்கவாசக சுவாமிகள், திருப்பெருந்துறையிற் சிவபெருமான் குருவாக வந்து தனக்கு ஞானோபதேசஞ் செய்த பேரருட் டிறத்தை நினைத்தும் அவனே எல்லா ஆன்மாக்களுக்குந் தலைவன் என்பதைக் குறிப்பிடக் கருதியும் "எங்கள் பெருந்துறைக் கோன்" என்றும், கிளி சொன்னதைச் சொல்லும் இயல்புடையதாதலாலும் பிரமா முதலிய தேவர்கள் எம்பெருமானைத் தேவர்பிரான் எனக்கூறுவதால் அவனே முதற்கடவுள் என்பதைக் குறிப்பிடக் கருதியும் "ஆரூரன் செம்பெருமான் வெண்மலரான் பாற்கடலான் செப்புவபோல் எம்பெருமான் தேவர்பிரான் என்றுரையாய்" என்றும், அவனுடைய திருநாமம் சிறப்புடைய தென்பதைக் குறிப்பிடுவதற்காக, சீரார் திருநாமம் என்றும், அவனுடைய திருநாமத்தைக் கூறும்போது பொருளறிந்து கூறுவது நன்றெனக் குறிப்பிடக் கருதி, "தேர்ந்துரையாய்" என்றுங் கூறியிருக்கிறார்.

செயற்கரிய செய்த காரணத்தால், கங்கை கொண்ட சோழன், நின்றசீர் நெடுமாறன், மனுநீதி கண்ட சோழன் எனப் பெயர் பெற்ற அரசர்கள் அழைக்கப்படுவதுண்டு. அது போலவே பிரமா முதலிய மும்மூர்த்திகளுக்கும் ஏனைய தேவர்களுக்கும் மேலானவனாய் விளங்குங் காரணத்தால், சிவபெருமானை மாணிக்கவாசக சுவாமிகள் தேவர்பிரான் என்னுந் திருநாமத்தாற் குறிப்பிடுகின்றார் போலும். ஆவ்வாறானால் ஈண்டுப் "பெயர் " என்றது காரணங் கருதி வந்த, புகழுதற்குரிய பெயரைக்குறிக்கும்.

இரண்டாவது பாடலில், "ஏதமிலா இன்சொல் மரகதமே" என்று கிளியை விளித்து! 'ஏழுலகங்களுக்குந் தலைவனும் எம்மை அடிமையாக உடையவனுமாகிய இறைவனது நாட்டைக் கூறுவாயாக. அன்பர்கள் தம்மீது செலுத்தும் அன்பை ஏற்றுக் கொண்டு, அவர் களுக்கு மீண்டு வராத வீட்டின்பத்தை அருள் புரியும் சிவபெருமானுடைய நாடு தென்பாண்டி நாடென்று தெளிவாயாக!' என்று கூறப் படுகின்றது. இப்பாடலில் எல்லா உலகங் களுக்குந் தலைவன் சிவனே என்பதைக் குறிப்பிடுவதற்காக "ஏழ் பொழிற்கும் நாதன்" எனவும் அவன் ஆன்மாக்கள் அனைத்தையும் அடிமையாக உடையவன் என்பதைக் குறிப்பிடு வதற்காக "காதலவர்க் கன்பாண்டு மீளா

கொன்றன்ன வின்னா செயினு மவர் செய்த
ஒன்றுநன் றுள்ளக் கெடும்.

முன்பு ஒருமுறை நன்மை செய்தவர், பின்பு கொலை போலும் பெருந்தீமைகளைச் செய்தாலும், அவர் செய்த நன்மை ஒன்றையே நினைக்க (அவையனைத்தும் மனதில் நில்லாமல்) மறைந்து போய்விடும். 109

அருள்புரிவான்" எனவும் கூறப்பட்டிருக்கின்றது. அன்பாளுதல் - அன்பை ஏற்றுக்கொள்ளுதல்.

உலகங்கெல்லாம் இறைவனுக்கு உடைமை யாகும். ஆனாலும் அவனருள் விளங்கித் தோன்றும் பல ஆலயங்களைத் தன்னகத்தே கொண்ட காரணத்தாலும் இறைவனது அறுபத்து நான்கு திருவிளையாடல்களும் நிகழ்ந்த இடமாதலாலும் மாணிக்கவாசக சுவாமிகள் தென்பாண்டி நாட்டை அவனுடைய நாடென்று கூறினார். "ஏழ் பொழிற்கும் நாதன்....நாடென்றும் தென்பாண்டி நாடே தெளி" என்று இப்பாடலிற் கூறிய மாணிக்கவாசகர்,

"தென்னா டுடைய சிவனே போற்றி
எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி"

என்று போற்றித்திருவகவலிலும் "தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே" எனச் சிவ புராணத்திலும் கூறுவதும் சிவனைப் பாண்டிப் பிரான் என அழைப்பதும் இக்கருத்துப்பற்றியே யாகும். திருவருள் விளக்கமுள்ள இடமே நாடெனத்தகும் என்பது திருவாசகந்தரும் விளக்கம்.

ஒவ்வொரு நாட்டுக்கும் ஒவ்வொரு தலைப் பட்டினம் உண்டு. பாண்டி நாட்டின் தலைப் பட்டினம் மதுரை. முதல் மந்திரியாய் இருந்த காலத்தில் மாணிக்கவாசகர் மதுரையிற்றான் வாழ்ந்திருப்பார். அப்போது அவர் அனுபவித்தது அரசபோகம். குருவின் உபதேசம் கிடைக்கப் பெற்றபின் அவருக்கு அரசபோகம் கசந்தது. அவர் சிவபோகத்தை நாடினார். உத்தர கோசமங்கைக்குச் சென்றார்.

அங்கு சிவனருள் வெள்ளத்துட்டிளைத்தார். அது காரணமாக அத்தலத்தையே சிவனது ஊரெனச் சிறப்பித்துப்பாடினார். "தாதாடு பூஞ்சோலைத் தத்தாய்! நமையாளும் மாதாடும் பாகத்தன் வாழ்பதி என்" எனக் கேட்டு, "பத்த ரெல்லாம் கோதாட்டிப் பார்மேற் சிவபுரம்போற் கொண்டாடும் உத்தர கோசமங்கை ஊர்" என்று மூன்றாவது பாடலிற் கூறினார். கோதாட்டுதல் - புகழந்து கூறுதல்.

ஒரு நாடு வளநாடாக விளங்க வேண்டு மானால்அந்நாட்டில் மலைவளமும் ஆறுதரும் நீர் வளமும் இருத்தல் வேண்டும். சிவபெரு மானுடைய நாடென்று போற்றப்படும் தென் பாண்டி நாடும் மலைவளமும் ஆற்று நீர் வளமும் உடையதாதல் வேண்டும். அவ்வாறும் மலையும் எவை என்னும் வினாவுக்கு நான்காம் ஐந்தாம் பாடல்கள் விடைதருகின்றன.

கிளியைக் " கிஞ்சுகவாய் அஞ்சுகமே" என விளித்து, "பெருந்துறைக்கோன் மஞ்சன் மருவும் மலை பகராய்" எனக்கேட்டு, " நெஞ்சத்து இருளகல வாள் வீசி ,இன்பமரு முத்தி அருளும் மலை" என விடை கூறுகிறது ஐந்தாம் பாடல். கிஞ்சுகம் - முருக்கம்பூ. அஞ்சுகம் - கிளி. மஞ்சன் - அழகன், வாள் - ஒளி. அருளொளி வீசி, மனத்திற் பொருந்திய அஞ்ஞான இருளை அகற்றி, பேரின்பப் பெருவாழ்வாகிய செல்வத்தைத் தருவது அந்த மலை.

"செய்யவாய்ப் பைஞ்சிறகிற் செல்வீ" எனக் கிளியை விளித்து, "நம் சிந்தைசேர் ஐயன் பெருந்துறையான் ஆறுரையாய்" எனக் கேட்டு "மலங்கழுவ வந்திழியும் ஆனந்தங்காண் உடையான் ஆறு" என விடை கூறுகிறது நான்காம் பாடல்.

"என்கிளியே" எனக் கிளியை விளித்து "ஒப்பாடச் சீருடையான் ஊர்வ தென்னே" எனக்கேட்டு, வான்புரவி யூரும் மகிழ்ந்து" என்று விடை கூறுகிறது ஆறாவது பாடல். ஒப்பாடா - உவமையில்லாத, வான்புரவி - ஞானா காசமாகிய குதிரை.

ஏழாவது பாடலில் படைபற்றிக் கூறப்படு கின்றது. "கோற்றேன் மொழிக் கிள்ளாய்" எனக் கிளியை விளித்து, "பெருந் துறைக்கோன் மாற்றாரை வெல்லும் படை பகராய்" எனக் கேட்டு "அழுக்கடையா நெஞ்சுருக மும்மலங்கள் பாயுங் கழுக்கடை காண் கைக்கொள் படை" என்று விடை கூறுகிறது இப்பாடல்.

மலபந்தம் மிக்கவரது மனம் இறைவனை நினைந்துருகாது. இறைவனை நினைந்துருகு

**Though one inflict in injury great as murder it will perish before the thought of one benefit (formerly) conferred. 109**

வதற்கு மலசத்தி தேய்ந்து மனமாசு நீங்கவேண்டும். அதனால் அவன் ஆன்மாக் களைப் பற்றி நிற்கும் மல சத்தியைத் தேய்த்து அவற்றைச் செந்நெறியிற் செலுத்துவதற்குரிய அருட்செயல்களை இடையீடின்றிச் செய்து கொண்டிருக்கின்றான். சிவன் கையிற் கழுக்கடை தாங்கியிருப்பது. அவன் ஆன்மாக் களுக்கு மலத்தை நீக்கி அருள் செய்கின்றான் என்பதைக் குறிக்கின்றது.

"அப்பணி செஞ்சடை ஆதி புராதனன்
முப்புரஞ் செற்றனன் என்பர்கள் மூடர்கள்
முப்பர மாவது மும்மல காரியம்
அப்புர மெய்தமை யாரறி வாரே"

என்கிறது திருமந்திரம்.

எட்டாவது பாடல் "இன்பால் மொழிக் கிள்ளாய்" எனக் கிளியை விளித்து "பெருந்து றைக்கோன் முன்பால் முழங்கும் முரசியம்பாய்" எனக்கேட்டு ," அன்பால் பிறவிப் பகை கலங்கப் பேரின்பத் தோங்கும் பருமிக்க நாதப்பறை" என விடை கூறுகின்றது. இங்குக் கூறப்படும் பறை போர்ப்பறை.

ஒன்பதாம் பாடலில் "தீயவினை நாளுமணு காவண்ணம் நாயேனை ஆளுடையான் தாளி அறுகாம் உவந்த தார்" என்று மாலை பற்றியும் பத்தாம் பாடலில் "கோதிலா ஏறாம் கொடி" என்று கொடி பற்றியும் கூறப்படுகின்றது. ஏறு- இடபம்.

அரசருக்கும் கடவுளர்க்கும் அடையாள மாலைகள் இருப்பதாகக் கூறப்படுகின்றது. பாண்டியனுக்கு வேம்பும் கந்தனுக்குக் கடம்பும் அடையாள மாலைகளாகக் கூறப்படுவது போலச் சிவபெருமானுக்குத் தாளியறுகு அடையாள மாலையெனக் கூறுகின்றார் மாணிக்கவாசக சுவாமிகள்.

சிவன் தனக்கொப்பாவார் இல்லாதவன். ஆன்மாக்களைப் பற்றி நிற்கும் மும்மலங்களையும் அறுத்து, அவற்றைத் தீயவினை அணுகா வண்ணங்காத்து, தன்னை அன்பு செய் வோருக்கு அருள் புரிபவன் சிவன். அவன் ஆன்மாக்களுக்குப் பிறவிப் பிணியை ஒழித்துப் பேரின்பப் பெருவாழ்வைக் கொடுக்கிறான். அவன் செய்யுஞ் செயலெல்லாம் அருட் செயல்க ளேயாகுமென்பதைத் தசாங்கத்தின் மூலம் உணர்த்துகின்றார் மாணிக்கவாசக சுவாமிகள்.

## சைவநீதி மாத இதழ்

பெறுமதி விபரம்

| தனிப்பிரதி | ஆண்டொன்றிற்கு |
|---|---|
| இலங்கையில் ரூபா 25.00 | ரூபா 250.00 |

ஏனைய நாடுகளில் ஸ்ரேலிங் பவுன் 10 அல்லது US$15.

*சைவநீதியின் வளர்ச்சியில் எங்கள் பங்களிப்பு என்ன என்பதை நாம் ஒவ்வொருவரும் சிந்திப்போமாக.*

சந்தா அனுப்ப வேண்டிய முகவரி :

C.NAVANEETHAKUMAR
42, JANAKI LANE,
COLOMBO - 04
SRI LANKA.

எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு.

எவ்வளவு பெரிய அறங்களைக் கெடுத்தவர்க்கும் (அத்தீவினைகளிருந்து நீக்கித்) தப்பும் வழி உண்டு. ஒருவன் செய்த நன்றியை மறந்தவனுக்கோ தப்பும் வழியே இல்லை. 110

# ஆற்றல் மிக்க அன்பு

–முருகவே பரமநாதன்

"அன்பு சுயநலமற்றது, சுயநலம் அன்பில்லாதது. அன்பு வழங்குகிறது, மன்னிக்கின்றது. சுயநலம் வாங்கிக்கொண்டு மறக்கிறது. அன்பினழுத்தம் உங்கள் ஒவ்வொரு செயலிலும் இருக்கும்போது அனைத்தும் பரிபூரணமாய்விடும். அன்பு முழுவதும் கடவுளை மையமாகக் கொண்டு அமைய வேண்டும்."

அன்பு என்னும் சொல் மனிதனுக்கு மட்டும் சொந்தமென்றில்லை, ஆனால் எழுத்தில் வடிக்கத் தெரிந்தவன் மனிதன். அன்பு பாராட்டுகிறானோ என்று பார்த்தால் இப்போ கொஞ்சம் பின்னடைவுதான். "உயிர்களிடத்து அன்பு வேண்டும்" என்பான் பாரதி. முலை யுண் ணிகளும், பறவைகளும் தம்மன்பை வெளிப்படுத்தும் இடம் தாய்மையின் போது. சிட்டுக்கள் குஞ்சுகளுக்கு உணவூட்டுவதும், காகம் குஞ்சுக்கு உணவு கொடுப்பதும், அன்பின் வெளிப்பாடே. இவ்வண்ணம் பசுவின் பரிவும் கன்றோடு தொடர்புடையதே. கற்றாவோடு ஒப்பிட்டு அருளாளர்கள் அன்பை வெளிப்படு த்தினர். இதையே ஆழ்வார்.

"தாய்நி னைந்தகன் றேயொக்க வென்னையும்
தன்னையே நினைக்கச் செய்து தானெனக்
காய்நி னைந்தருள் செய்யு மப்பனை
அன்றிவ் வையக முண்டுமிந்திட்ட
வாயனை மகரக் குழைக் காதனை
மைந்தனை மதிள் கோவ லிடைகழி
ஆயனை அமரர்க்கரி யேற்றை யென்
அன்பனை யன்றி யாதரியேனே"

எனப் பாடுகிறார். இதை மாற்றிப் போட்ட வாதவூரர் பால் நினைந்தூட்டும் தாயெனக் கூறினார். தாயன்பு மேலானதுதான். தாயிலும் எத்தனை வகை. ஆழ்வார் திருமாலை அன்பன் என ஆராமையோடு அழைக்கின்றார். இந்த அன்பு முறிபட்டுப் போவதும் இயல்பே. மனைவி மீதுள்ள அன்பு அவள் மறைந்தபின் இன் னொருத்திக்காகிறது. காதலர் எத்தனை பேர் தொடராமுறி எழுதினர். நண்பர்களுமப்படியே மாறிவிடுவர். இது எல்லாம் பொய்யன்பு என்றும் ஒருமைத்தாய் நிற்பது, நிலையானது மெய்யன்பு. மற்றதெல்லாம் போலியே. ஆக இறையன்பு ஒன்றே நிலையான அன்பு. மற்றவை போலியாக மாறுகின்றன. இரு உள்ளங்களின் நெகிழ்ச்சி அன்பு எனப்படும். காதல், பாசம், நேசம், ஈரம், பசை, வாரம் என்பன அன்பையே குறிப்பன. அடியார் சிறப்பைச் சேக்கிழார் பேசும் வண்ணம் இது.

"ஆரம் கண்டிகை ஆடையுங் கந்தையே
பாரம் ஈசன் பணிஅல, தொன்றிலார்
ஈர அன்பினர் யாதுங் குறைவிலர்
வீரம் என்னால் விளம்பும் தகையதோ"

திருக்கூட்டச் சிறப்பு 9

வள்ளுவப் பெருந்தகை அன்பின் பெரு மையைப் பல இடங்களிலே விதைத்த போதும் அன்பு என்றோர் அதிகாரம் செய்துள்ளார். வாழ்வின் அடிநாத மான அன்பில்லா வாழ்வில் எவ்வித மகிழ்ச்சியுமில்லை. எனவே ஒல்லும் வாயெல்லாம் அன்பை விதைத்து அறுவடை கண்டுள்ளார்.

"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு"

குறள் 72

அன்பிலாதார் பிறர்க்குப் பயன் படாமையின் எல்லாப் பொருளானுந் தமக்கே உரியர், அன்புடையார் அவற்றானேயன்றித் தம்முடம் பானும் பிறர்க்குரியர்.

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது"

குறள் 45

**He who has killed every virtue may yet escape, there is no escape for him who has killed a benefit. 110**

ஒருவன் இல்வாழ்க்கை தன் துணைவிமேற் செய்யத்தகும் அன்பினையும், பிறர்க்குப் பகுத் துண்டலாகிய அறத்தினையும் உடைய தாயின் அவ்வுடைமை அதற்குப் பண்பும் பயனுமாம்.

"அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொ
டைந்து சால் பூன்றிய தூண் "

குறள் 983

சுற்றத்தார் மேலேயன்றிப் பிறர் மேலும் உளதாய அன்பும், பழிபாவங்களின் நாணலும், யாவர் மாட்டும் ஒப்புரவு செய்தலும், பழையார் மாட்டுக் கண்ணோடலும், எவ்விடத்தும் மெய்மை கூறலுமென், சால்பென்னும் பாரத்தைத் தாங்கிய தூண்கள் ஐந்து. அன்பின் முதிர்ச்சியே அருளாய் மலரும். இந்த முதிர்ந்த முற்றிய இடையீடற்ற அன்பு என்றும் நிலை பேறுடையதாம். அன்பே சிவம் என்பது திருமூலர் வாக்கு.

"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே "

திருமந்திரம் 257

இதன் பொருள்: அன்பாகிய திருவருளும் இன்பமாகிய சிவனும் மணியும் ஒளியும் போல ஒன்றே. அவற்றை இருவேறு பொருள்கள் என்று கூறுவோர் மெய்யுணர்வு கைவரப் பெறாதார் மெய்ம்மையான நோக்கின் அன்பாகிய திருவருளே இன்பாகிய சிவனுக்குத் திருமேனியாகும். அம்முறையான் அன்பே சிவமாகும். இவ்வுண்மையினையும் எவரும் உணர்கிலர். அன்பே சிவம் என்னும் உண்மை யினை அருளால் அனைவரும் அறிந்த பின் தாம் இடையறாது திருவடிக்கண் வைக்கும் அன்பாகிய வித்தே சிவமாய் விளைந்து இன்பமாய்க் கனிந்து அவ்வன்புடையார்க்கு என்றும் பொன்றாப் பேரின்ப நுகர்வாகும். அவ்வுண்மை சிவமாய் அமர்ந்திருந்தார் இம்மறை மொழியான் அறியலாம். அன்பு என்ற பண்பிற்கு அடைக்கின்ற கதவே இல்லை. அன்பில்லாத மனித தேகம் என்பு தோல் போர்த்த தேகம் என்றார் வள்ளுவர். அன்பெனுந் தொடர்பு ஈயெறும்பிலிருந்து இறைவனோடு தொடர் புடையது. உணவு கூட அன்போடு அளிக்க வேண்டும் என்பள் அவ்வை. எப்படி மூச்சை யடக்கித்தவம் செய்யினும், உடம்பையொடுக்கி விரதம் மேற்கொள்ளினும், வாய் நிறையத் தோத்திரம் பாடினும், ருத்திரம் செபிக்கினும், பாதபூசை செய்யினும், பயனில்லை. அன்போடு அகம் குழைபவர்க்கே ஆண்டவன் அருள் பாலிப்பான்.

"என்பே லிறகா இறைச்சி அறுத்திட்டுப்
பொன்போற் கனலிற் பொரியவறுப்பினும்
அன்போடுருகி அகங்குழைவார்க் கன்றி
என்போல் மணியினை எய்த வொண்ணாதே"

திருமந்திரம் 259

"அன்பின் ஆனஞ்ச மைந்துட னாடிய
என்பின் ஆனையுரித்துக் களைத்தவன்
அன்பி லானையம் மானையள்ளூறிய
அன்பினால் நினைந் தாரறிந் தார்களே"

திருமுறை 5:80.3

அன்பிற்கு எல்லையே இல்லை. அன்புடை நெஞ்சம் ஒன்று கலந்ததே காதல் வாழ்வு. எங்கெங்கே அன்பு பாலிக்கின்றோமோ அவை எல்லாவற்றையும் ஒன்றாகத் திரட்டி இறை வன்மாட்டு அன்பு காட்டின் அவன் கருணை எம்மாட்டுக் கரைகடந்து பாயு மன்றோ! இந்த அன்பின் பெருக்கத்தை, உயர்வை, மேன் மையை, பயனைத் திருவாசகச் செம்மல் வாதவூரண்ணல் பலபடித்திறங்களிற் பேசும் பாணி எம் நெஞ்சை அள்ளுகின்றது. ஓர் இடத்திலே எல்லையில்லா அன்பைத் தீர்ந்த அன்பு என எல்லை கட்டுகின்றார்.

தீர்ந்த அன்பாய அன்பர்க்கு அவரினும்
அன்ப போற்றி
பேர்ந்துமென் பொய்ம்மை ஆட்கொண்டருளிடும்
பெருமை போற்றி
வார்ந்தநஞ் சயின்று வானோர்க் கமுதம்ச
வள்ளல் போற்றி
ஆர்ந்தநின் பாதம் நாயேற்கு அருளிட
வேண்டும் போற்றி

திருச்சதகம் 69

எந்த அளவு அன்பு பாரிக்கிறோமோ

அதனினும் பன்மடங்கு அன்பு பாலிக்கிறான் இறைவனென்பதைத் தீர்ந்த அன்பு எனக் காட்டினர் போலும். எனவே கண்ணப்பனுடைய அன்போடு தன்னன்பை ஒப்பீடு செய்து அந்த அளவுக்கு என் அன்பு இல்லையே என ஆதர்சப்படும் மணிமொழியாரின் அன்பின் ஆற்றல் அளக்கவொண்ணாததாகும்.

"கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்
என்னப்பன் என்னொப்பில் என்னையும் ஆட்கொண்டருளி
வண்ணப் பணித்தென்னை வாவென்ற வான்கருணைச்
சுண்ணப்பொன் நீற்றற்கே சென்றூதாய் கோத்தும்பீ"

திருக்கோத்தும்பி 4

இதைப் பட்டினத்தார் தொண்டு செய்து நாளாறிற் கண்ணிடந் தப்பவல் வேனல்லன் என்று கரைகிறார். இக் கண்ணப்பனின் அன்பின் வரம்பிலாற்றலைச் சேக்கிழார் பேசும் பாங்கு இது. ஆரா அன்பு, செவ்விய அன்பு, என்று போற்றிய பெரியபுராணம் கண்ணப்பனின் முழுமையான அன்பின் திறத்தை ஆராமையோடு பேசுகிறது.

"அவனுடைய வடிவெல்லாம் நம்பக்கல் அன்பென்றும்
அவனுடைய அறிவெல்லாம் நமை அறியும் அறிவென்றும்
அவனுடைய வடிவெல்லாம் நமக்கினியவாம் என்றும்
அவனுடைய நிலை இவ்வாறறி நீ"என்றருள் செய்தார்

கண்ணப்பநாயனார் புராணம் 157

அன்பே வடிவான கங்கைவேடன் குகனைக் கம்பர் படம் பிடித்துக் காட்டினார் மீனிலும் தேனிலும். காளத்தி வேடனான கண்ணப்பனைப் படம் போட்டுக்காட்டினார் சேக்கிழார் இறைச்சியிலும், தேனிலும். இந்த அன்பின் வலு (Power) சக்தி (Energy) பற்றிப்பாடிய மணிமொழியார்

"போற்றி யென்றும் புரண்டும் புகழ்ந்தும் நின்று
ஆற்றல் மிக்கஅன் பாலழைக் கின்றிலேன்
ஏற்று வந்துதெதிர் தாமரைத் தாளுறும்
கூற்ற மன்னதொர் கொள்கையென் கொள்கையே"

என்று கூறுகிறார்

திருச் சதகம் 45

ஆ! எம் ஆற்றலையெல்லாம் திருப்பி ஆற்றல் மிகு அன்பாக்கி ஆண்டவன் பக்கம் செலுத்தின் பிறவியின் இலக்கு எய்தலாம்.

## சைவசித்தாந்த வகுப்பு, பண்ணிசை வகுப்பு

சிவத்திரு மன்றத்தினர் பிரதி சனி தோறும் மாலை 4.00 மணிக்கு சைவசித்தாந்த வகுப்பும் பிரதி ஞாயிறு தோறும் மாலை 4.00 மணிக்கு பண்ணிசை வகுப்பும் நடத்தவுள்ளனர். இவ்வகுப்புக்கள் 28.01.2001 ஞாயிறு மாலை 4.00 மணிக்கு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் ஆரம்பமாகவுள்ளது.

# சைவ நெறிப் பாடமும் பயிற்சியும்

## திருமூலர்

சாந்தையூரான்

### பாடப் பொழிப்பு

திருமூலர்
↓
திருக்கைலாய மரபில் வந்தவர்
↓
இம்மரபு

சிவமரபு சைவமரபு நந்திமரபு நாதமரபு

என அழைக்கப்படும்

நந்தி தேவர்

சிவபெருமானை வணங்கியபடி திருக்கைலாய மலையிலுள்ள கல்லாலா மரத்தின் கீழ் இருந்து சிவ ஆகமங்களை எட்டு முனிவர்க்கு உணர்த்தினர்.

சனகர் சனந்தனர் சனாதனர் சனற்குமாரர் வியாக்கிரபாதர் பதஞ்சலி சிவயோகமாமுனிவர் திருமூலர்

தருமூலரின் இயற்பெயர் சுந்தரநாதர்
↓
ஞான குருவாகிய தெட்சணாமூர்த்தியின் சின் முத்திரையில் வெளிப்படும் ஆகமங்களை உணர்ந்து திளைத்தார்.
↓
எட்டு முனிவர்களும் கைலாய மலையில் மௌனமாக யோக நிட்டையில் இருக்கும் போது
↓
மலங்கலதேவர்
சுந்தரநாத முனிவரை (திருமூலரை) அணுகி அங்கிருப்பவர் யார் என வினவினார்.
↓

திரு மூலர்
↓
தாங்கள் எண்மரும் திரு நந்தி தேவரின் மாணாக்கர் எனவும் தாம் சிவ ஆகமப் பொருளை உணர்ந்து அநுபவித்துச் கொண்டிருப்பதாகவுங் கூறினர்.
↓
மலங்கல தேவர்
தென் நாட்டில் மக்கள் நல்ல வழிகாட்டி இல்லாது தவிப்பதாகவும் அவர்களுக்கு மூலமும் முதலுமாக உள்ள சிவத்தையும் ஆகமங்களையும் போதிப்பதற்காக வருகை தருமாறும் வேண்டினார்.
↓
சுந்தர நாதர்
↓
திருநந்தி தேவரிடம் அநுமதி பெற்றுத் தமிழ்நாட்டின் சிதம்பரத்தை அடைந்தார். உலகத்தவர் நன்மையின் பொருட்டுப் பேரம்பலமாகிய கையிலையில் இருந்து சிற்றம்பலமாகிய சிதம்பரம் எழுந்தருளினார்.
↓
சுந்தரநாதர் ,
↓
திருவாவடு துறையில் யோக நிட்டையில் ஆழ்ந்து மூலத்தை, முழுமுதலை நாடி உணர்ந்து திருமூலன் ஆனார். திருமூலர் தனக்கு இட்ட பணியாக க்கூறியது.
↓
என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே
↓
எனத் தென்னாட்டிற்கு வருகைதந்த நோக்கைத் திருமூலர் கூறுகிறார்.

மலங்க முனிவ, தான் இங்கு வரக் காரணமானவர் நீல அங்கத்திருமேனியை உடைய சிவனும், நேரிளையாள் பார்வதியும் எனவும் மூல அங்கமாக கூறிய திருக்கூத்தன்
சீல அங்க – சிறப்பு பெற்ற வேதத்தை கூறவதற்கு தாம் வந்ததாகவும் கூறுகின்றார்.

↓

திருமூலர்

↓

சித்தத்தைச் சிவன்பால் வைத்த சித்தர் ஆவர்

↓

இவர்

↓

மூவாயிரம் ஆண்டுகள் இவ்வுலகில் வாழ்ந்து ஆண்டுக்கு ஒரு மந்திரப் பாடலாக மூவாயிரம் திருமந்திரப் பாடல்கள் இயற்றினார். திருமந்திரம் ஒன்பது தந்திரங்களை உடையது.

காரணம் | வீரம் | வாதுமை | சர்வோக்தம் | மகுடம்
காமிகம் | சிந்தியம் | விமலம் | சுப்பிரபேதம்

திருமந்திரம் பத்தாம் திருமுறையாகும்

↓

திருமந்திரமாகிய மூலன் உரைத்த மூவாயிரம் தமிழை உலகு அறியச்செய்யவே நந்தி அருளினர்.

↓

சேக்கிழார் கூறும் திருமூல நாயனார் வரலாறு

நந்தி தேவரின் மாணாக்கரான சிவயோகியான இவர் அகத்திய மாமுனிவரைக் காணும் பொருட்டு கைலையிலிருந்து திருவாவடு துறைக்கு வந்தார். காவிரிக்கரையில் பசுக்கள் கண்ணீர் விடுவதைப் பார்த்தார். சாத்தனூரைச் சேர்ந்த மூலன் என்ற இடையன் விதி தீர்ந்ததனாலே தரையில் வீழ்ந்து இறந்து விடுகிறான். பசுக்களின் துயரத்தைப் போக்க வேண்டி முனிபுங்கவர் கூடு விட்டுக் கூடு பாய்கின்ற தம் ஆற்றலைப் பயன்படுத்தி மூலன் உடலில் புகுந்தார்.

மாலையில் பசுக்கள் தத்தம் கன்றுகளை நினைத்து வீட்டுக்குச் சென்றன. மூலனுடைய மனைவி தம்மை வீட்டுக்கு அழைத்தும் அவர் போகவில்லை. தமது உடலைத்தேடினார் அதைக்காணாது எல்லாம் இறைவன் செயல் என எண்ணினார்.

திருமந்திரம் எழுதும் பொருட்டே மூலன் உடம்பு தனக்குக் கிடைத்தது என எண்ணிச் சைவநெறியின் தோத்திர சாஸ்திர நூலாகத் திருமந்திரத்தை இயற்றினார்.

## செயற்பாடு

**I. கீழ்க்காணும் வினாக்கட்கு விடை எழுதுக.**

1. சிவ ஆகமத்தை உணர்ந்த எட்டு முனிவர்களும் யார்?
..............................................................

2. சுந்தரநாத முனிவரது ஞானகுரு யார்?
..............................................................

3. தமிழ் நாட்டிலிருந்து கைலாய மலை சென்றவர் பெயர் என்ன?
..............................................................

4. தென்னாடு பற்றி மலங்கர் கூறியது யாது?
..............................................................

5. திரு மூலர் தனக்கு இட்டபணியாகக் குறிப்பிட்டது யாது?
..............................................................

6. எதனைத் தான் செப்ப வந்ததாகத் திரு மூலர் கூறுகிறார்?
..............................................................

7. திருமூலர் எதனைச் சிவன் பால் வைத்துச் சித்தர் ஆனார்?
..............................................................

8. திருமந்திர நூலின் தந்திரங்கள் எவை?
..............................................................

9. திருமந்திரம் எத்தனையாம் திருமுறை?

..................................................................

10. மூலனுக்கு உயிர்கொடுக்கக் கையாண்ட கலை யாது?

..................................................................

## விடைகள்

1. சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர் வியாக்கிரதபாதர், பதஞ்சலி, சிவயோகமாமுனிவர், திருமூலர்.
2. நந்தி தேவர்
3. சுந்தரநாதர்
4. தென் நாட்டில் மக்கள் நல்ல வழிகாட்டல் இல்லாது தவிப்பதாகவும் அவர்களுக்கு மூலமும் முதலுமாக உள்ள சிவத்தையும் ஆகமங்களை யும் போதிப்பதற்காகவும் வருகை தரு மாறு வேண்டினார்.
5. "என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யு மாறு".
6. நீல அங்கத்திருமேனியை உடைய சிவனும். நேரிளையாள் பார்வதியும் மூல அங்கமாகக் கூறிய திருக் கூத்தன் சீல அங்கச்சி றப்புப் பெற்ற வேதத்தைக கூறுவதற்கு த்தாம் வந்ததாகக் கூறினார்.
7. சித்தத்தைச் சிவன்பால் வைத்த சித்தர் ஆவார்.
8. காரணம், காமிகம், வீரம், சிந்தியம், வாதுமை, விமலம் சர்வோக்தம், சுப்பிரபேதம், மகுடம்
9. திருமந்திரம் பத்தாம் திருமுறை
10. கூடு விட்டுக் கூடு பாய்கின்ற தம் ஆற்றலைப் பயன்படுத்தினார்.

## பல்வகைக் கூற்றங்கள்

**கல்லாத மாந்தர்க்குக் கற்றுணர்ந்தார் சொற்கூற்றம்**
**அல்லாத மாந்தர்க்கறம் கூற்றம் - மெல்லிய**
**வாழைக்குத் தான்ஈன்ற காய்கூற்றம் கூற்றமே**
**இல்லிற்கு இசைந்தொழுகாப் பெண்**

கல்லாத மாந்தர்க்கு ~ கல்வியறிவில்லாத மனிதர்கட்கு, கற்றுணர்ந்தார் சொல் கற்றறிந்தவருடைய உறுதியான சொல், கூற்றம் ~ இயமனாம் (துன்பம் செய்யும் என்றவாறு) அல்லாத மாந்தர்க்கு ~ (அறம் செய்வதில் விருப்பம்) இல்லாத மாந்தர்க்கு, அறம் ~ தருமமே, கூற்றம் ~ இயமனாகும் மெல்லிய வாழைக்கு ~ மெல்லிய வாழை மரத்துக்கு, தான் ஈன்ற காய் கூற்றம் ~ அது ஈன்ற காயே இயமனாம், (அதுபோல) இல்லிற்கு இசைந்து ஒழுகாப் பெண் ~ இல்வாழ்க்கைக்குப் பொருந்தி நடவாத மனைவி, கூற்றம் ~ (கணவனுக்கு) இயமனாவாள்.

**(கரு)** கற்றறிந்தவரது சொல்லினால் கல்லாதவர்க்கும், தருமத்தினாலே பாவிகட்கும், பொருத்தமில்லாத மனைவியாலே கணவனுக்கும் துன்பம் விளையும்.

உ




# LANKA BOOK DEPOT

F.L.1.14, Dias Place, Gunasinghapura, Colombo - 12.
Tel: 341942

# SRI LANKA BOOK DEPOT

F.L.1.14, Dias Place, Gunasinghapura, Colombo - 12.
Tel: 341942

உ

இறக்குமதி செய்யப்பட்ட சிலா விக்கிரகங்கள்
தாம்பர விக்கிரங்கள், பூசை விளக்குகள்
வார்ப்பு மணி, பட்டுக் குடை, அலங்கரிக்கும் பொருட்கள்
திருவாசிகள், வெள்ளி அங்கிகள் எம்மிடம்
விற்பனைக்கு உண்டு. கோயிலுக்கு தேவையான சகல
ஓடர்களும் ஏற்றுக்கொள்ளப்படும்.



# TANIYA ENTERPRISES

193/A, Sri Kathiresan Street, Colombo - 13.
Tel: 074-619185, 077-769443

Regd. No. QD/19/News 2001 இவ்விதழ் சைவநீதி நிறுவனத்தினரால் இல. 195, ஆட்டுப்பட்டித்தெரு, கொழும்பு 13, லக்ஷ்மி அச்சகத்தில் அச்சிட்டு 03-02-2001 இல் வெளியிடப்பட்டது.